தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 06 சுபகிருது வருடம், ஆனி மாதம் 15ஆம் திகதி புதன்கிழமை
(29.06.2022) ஹிஜ்ரி - 1443, ஜுல்ஹுஃதா - 28, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

உறுதியளித்ததை செய்யாவிடின் பதவி துறந்து வீடு செல்வேன்

தம்மிக்க பெரேரா திட்டவட்டம்

எதிர்வரும் 06 மாதங்களில் இலங்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவதே தமது இலக்கு என அமைச்சர் தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களின் பசியைப் போக்க முடியவில்லை என்றால், அதிகாரத்தில் இருப்பதில் அர்த்தமில்லை என தனது தாய் தெரிவித்ததாக, 'தெரண' தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலில் அவர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

02 பக்கம்

தம்மிக்கவின் அமைச்சின்கீழ் ஐந்து நிறுவனங்கள் சேர்ப்பு

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக்க பெரேராவின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபை, குடிவரவு -குடியகல்வுத் திணைக்களம் மற்றும் ஏனைய ஐந்து நிறுவனங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஜூன் 27ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின்படி, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு, கொழும்பு துறைமுக நகரம் தொடர்பான திட்டம், கொழும்பு லோட்டஸ் டவர் முகாமைத்துவ நிறுவனம் (பிரைவேட்) லிமிடெட், டெக்னோ பார்க் டெவலப்மெண்ட் கம்பனி (பிரைவேட்) லிமிடெட் மற்றும் தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள் என்பன அமைச்சர் தம்மிக்க பெரேராவின் கீழ் வரும்.

இதேவேளை, இலங்கை அரசியலமைப்பின் 44(1)(ஆ) சரத்தின் கீழ், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக குளப்பு ஆராச்சிகே டொன் தம்மிக்க பெரேரா நியமிக்கப்பட்டதை உறுதிப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத் ஜூன் 24ஆம் திகதி வெளியிட்டார்.

எரிபொருள் நெருக்கடி காரணமாக கொழும்பில் துவிச்சக்கரவண்டியின் பயன்பாடு அதிகரித்துள்ளது.
(படப்பிடிப்பு - சமன் அபேசிறிவர்தன)

நாளைமுதல் பஸ் கட்டணம் 30 வீதத்தால் அதிகரிப்பு

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தனியார் பஸ் கட்டணத்தை அதிகரிக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஜூலை 01ஆம் திகதிமுதல் அமுலுக்கு வரும்வகையில் பஸ் கட்டணங்கள் 30 வீதத்தால் அதிகரிக்கப்படுமென சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய பஸ் கட்டண உயர்வைத் தொடர்ந்து, குறைந்தபட்ச பஸ் கட்டணம் 40 ரூபாவாக அதிகரிக்கப் பட்டுள்ளதாக அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அதிகாரி களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்தே பஸ் கட்டணத்தை அதிகரிப்பதற்கான தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமிய நாடுகள் நேசக்கரம் நீட்டின!

இலங்கைக்கு உதவுவதாக கட்டார் உறுதிமொழி

மத்திய கிழக்கின் ஏனைய நாடுகளும் உதவ ஆலோசனை

*நமது செய்தியாளர்

இலங்கை தற்போது எதிர்கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்குத் தேவையான உதவிகளை செய்வதாக கட்டார் அரசாங்கம் நேற்று அறிவித்திருக்கிறது.

நாட்டின் தற்போதைய எரிபொருள் நெருக்கடி நிலை இதர அவசர தேவைகள் குறித்து பேச்சுவார்த்தையொன்றை நேற்று கட்டார் சென்ற அமைச்சர்களான காஞ்சன விஜேசேகர, ஹரீஸ் நசீர் அஹ்மத் ஆகியோர் அந்நாட்டு எரிபொருள்துறை அமைச்சர் சாத் ஷெரிடா அல் - காபி மற்றும் உயரதிகாரிகளை சந்தித்து பேச்சு நடத்தினர். அதன்போதே கட்டாரின் இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

எரிபொருள் தேவைக்கான உதவிகளுக்கு அப்பால், எரிவாயு தேவைகளைப் பூர்த்தி செய்யவும் கட்டார் முன்வந்துள்ளதாக நேற்றிரவு அறியமுடிந்தது. நீண்டகால கடன் அடிப்படையில் உதவிகளை வழங்கவும் மானிய அடிப்படையில் இலங்கை மக்களுக்கு நிவாரணங்களை வழங்கவும் கட்டார் விருப்பை வெளியிட்டிருப்பதாக அறியமுடிந்தது.

இதேவேளை, சவூதி அரேபியாவும் எரிவாயுவை இலங்கைக்கு வழங்க ஆலோசித்துவருவதாக தெரியவருகிறது. கட்டார் பயணத்தின் பின்னர் அமைச்சர் ஹரீஸ் நசீர் சவூதிக்கான பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக தெரியவந்தது.

செலவைக் குறைப்பதற்காக சுற்றுலா அமைச்சு இடமாற்றம்

அமைச்சர் ஹரீன் நடவடிக்கை

உலக வர்த்தக மைய கோபுரத்தில் அமைந்துள்ள சுற்றுலாத்துறை அமைச்சின் அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றம் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் செலவீனங்களைக் குறைக்கும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவினால் மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த அமைச்சானது உலக வர்த்தக நிலையத்திலுள்ள அலுவலகத்திற்கான வாடகையாக 1.8 மில்லியன் ரூபாவை செலுத்தியது.

சுகாதார தொழிற்சங்கங்கள் 2 நாட்கள் வேலை நிறுத்தம்

பொதுச் சுகாதார தொழிற்சங்கக் கூட்டமைப்பின் இன்று மற்றும் நாளை வேலை நிறுத்தத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொதுச் சுகாதார தொழிற்சங்கக் கூட்டமைப்பின் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக குறித்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை, பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உட்பட 08 துணை சுகாதார தொழிற்சங்கங்களும் இன்று மற்றும் நாளை வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வேலை நிறுத்தம் தொடர்பில் பொதுச் சுகாதார தொழிற்சங்கக் கூட்டமைப்பின் தலைவர் உபுல் ரோஹன அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

'டோக்கன்' முறையின் ஊடாக ஐ.ஓ.சி. எரிபொருள் விநியோகம்

லங்கா ஐ.ஓ.சி. எரிபொருள் நிலையங்கள் அத்தியாவசிய சேவை வரையறையில் இல்லாத வாகனங்களுக்கான எரிபொருளை தொடர்ந்து விநியோசிக்கும் என அதன் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், அதன் எரிபொருள் நிலையங்கள் 'டோக்கன் முறை' மூலம் செயற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் கிடைக்கப்பெற்றதும், எரிபொருளைப் பெற விரும்பும் வாடிக்கையாளரை இராணுவத்தினர் தொலைபேசியில் அழைப்பார்கள் எனவும், டோக்கன் முறை ஏற்கனவே நடைமுறையில் உள்ளது எனவும் இதைச்செய்ய, வாடிக்கையாளர் முதலில் டோக்கனைப் பெறவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நெருக்கடியை சமாளிக்க இலங்கைக்கு பெற்றோலிய பொருட்களை பெறுவது குறித்து எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, கட்டார் எரிசக்தி அமைச்சர் சாத் ஷெரிடா அல்-காபியுடன் நேற்று பேச்சு நடத்தினார்.

வெறிச்சோடிய நகர வீதிகள்

தனியார் வாகனங்களுக்கு எரிபொருள் வழங்கப்பட மாட்டாதென அரசாங்கம் அறிவித்ததையடுத்து கொழும்பு மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் எனநெரில் அதிகமாக காணப்படும் வீதிகள் நேற்று வெறிச்சோடிப் போயிருந்தன.

ஏனைய வேலை நாட்களில் கடும் போக்குவரத்து நெரிசல் காணப்படும் நகரங்களில் கூட நேற்று அதிகளவை வாகனங்கள் மிகக் குறைவாக காணப்பட்டதுடன், மக்கள் நடமாட்டமும் வெகுவாக குறைந்து காணப்பட்டது.

02 பக்கம்

கமெண்ட் கந்தர்..

அறிகுணிக்கா ஏதோ தனிப்பட்ட வேலையா புறக்கோட்டைக்கு போனவவாம்.. கொஞ்ச நேரத்தில அந்த ரோட்டை பொலிஸ் மூடிட்தொம்.. அரண்டவன் கண்ணுக்கு இருண்டவெல்லாம் என்னவேலா எண்டு சொல்லுவாங்கசே...

உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்த இலங்கைக்கு உதவும் அமெரிக்கா

200 மில்லியன் டொலர்கள் வழங்க முடிவு

இலங்கையில் உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்த 20 மில்லியன் டொலர் கூடுதல் உதவியை வழங்குவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

ஜேர்மனியில் நேற்று நடைபெற்ற G7 உச்சி மாநாட்டில் கலந்துகொண்டபோதே அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இவ்வாறு அறிவித்துள்ளார்.

அமெரிக்காவின் பிற சமீபத்திய நிதி அறிவிப்புகளின் அடிப்படையில், இலங்கைக்கான இந்த உதவித் திட்டம் புதிதாக இணைக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்

தம்புள்ளையில் எரிபொருள் பெற முயற்சித்த வெளிநாட்டவர்கள்

மக்களின் எதிர்ப்பினால் பதற்றம்

தம்புள்ளையில் எரிபொருள் பெற்றுக் கொள்ள முயற்சித்த வெளிநாட்டவர்களால் தம்புள்ளை ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக நேற்று பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் எரிபொருள் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில், தம்புள்ளை ஐ.ஓ.சி. பெற்றோல் நிலையத்தில் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளை ஏற்றிச்செல்லும் பெருமளவிலான வாகனங்கள் எரிபொருளை பெற்றுக்கொள்ள காத்திருந்தன.

02 பக்கம்

உஷ்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இரண்டு சிரேஷ்ட உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைய தீர்மானித்துள்ளனராம்.

இந்த இரண்டு உறுப்பினர்களுக்கு மாவட்ட ரீதியில் உயர் பதவிகள் வழங்கப்படவுள்ளதாகவும் தகவல். இவர்களை தடுத்துநிறுத்த மைத்ரி முயற்சிகளை எடுத்தபோதும் அவை வெற்றியளிக்கவில்லையாம்.

நாடு பற்றி எரிகிறது விழித்தெழுங்கள்!

சனத் ஜயசூரிய தெரிவிப்பு

இலங்கையில் தற்போதைய எரிபொருள் நெருக்கடியுடன் அரசாங்கத்தின் மீது சர்வதேசத்தில் மாத்திரமல்ல உள்நாட்டிலும் நம்பிக்கை இல்லாமல் போயுள்ளதாக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் சனத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

தனது ட்விட்டர் பக்கத்தில் இட்டுள்ள பதிவில் அவர் இதனை கூறியுள்ளார். நாட்டின் தற்போதைய எரிபொருள் நெருக்கடியுடன் அரசாங்கம் மீது சர்வதேசத்தில் மாத்திரமின்றி தேசிய ரீதியிலும் நம்பிக்கை இல்லாமல் போயுள்ளது என்பது தெளிவானது.

மக்கள் முன்பை விட கஷ்டங்களுக்கு உள்ளாகி இருக்கின்றனர்.

எமக்கு தேவை வீரன், பிடில் வாசிக்கும் ஹீரோ அல்ல. நாடு பற்றி எரிகின்றது விழித்தெழுங்கள் என சனத் ஜயசூரிய கூறியுள்ளார்.

வெளியுறவு அமைச்சரை சந்தித்த அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் மற்றும் இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோருக்கிடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த கலந்துரையாடல் தொடர்பில் ஜூலி சங் ட்விட்டர் பதிவொன்றினை வெளியிட்டுள்ளார்.

மேலும், பொருளாதார பங்காளித்துவத்தை மேம்படுத்துதல்.

இலங்கையர் களுக்கு வழங்கப்படும் உதவிகள் மக்களை சென்றடைவதை உறுதி செய்வதற்கு இரு நாடுகளும் எவ்வாறு இணைந்து செயல்பட முடியும் என்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டதாக கூறியுள்ளார்.

இதேவேளை, குறித்த கலந்துரையாடலில் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிடன் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தனவும் கலந்து கொண்டுள்ளார்.

உணவுப் பாதுகாப்பை...

மேலும், இந்த உதவித்திட்டம் அடுத்த 15 மாதங்களில் 800,000க்கும் மேற்பட்ட இலங்கை குழந்தைகளுக்கு உணவளித்தல், 27,000 க்கும் மேற்பட்ட கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்களுக்கு உணவு வவுச்சர்களை வழங்குதல், பாடசாலை ஊட்டச்சத்து திட்டத்திற்கு ஆதரவளித்தல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இதேவேளை, பாதிக்கப்படக்கூடிய இலங்கை சமூகங்களில் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காக, விவசாய உதவிகள் மற்றும் பணத்தின் பங்களிப்பு மூலம் சுமார் 30,000 விவசாயிகளுக்கு ஆதரவளிக்கவும் இந்த உதவி திட்டம் முயற்சிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், "இலங்கைக்கு 20 மிலியன் டொலர் கூடுதல் உதவி வழங்குவதாக அறிவித்திருப்பது. உணவு பாதுகாப்பு, பொது சுகாதாரம் மற்றும் அனைத்து இலங்க மக்களின் பொருளாதார நல்வாழ்வுக்கான அமெரிக்காவின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை நிரூபிக்கிறது" என கூறியுள்ளார்.

பாண்டிச்சேரி - காங்கேசன்துறை படகுச் சேவை எந்நேரத்திலும் ஆரம்பிக்கப்படலாம்

அமைச்சர் டக்ளஸ்

இந்தியாவிலிருந்து பொருட்களை கொண்டு வருவதற்கான இறுதிக்கட்டப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் பொருட்களை ஏற்றி வருவதற்கான படகுகள் தயார் நிலையில் இருப்பதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று (28) இடம்பெற்ற அத்தியாவசிய சேவைகளை ஒழுங்குபடுத்துவது தொடர்பான கலந்துரையாடலின் பின்னர் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

மேலும், "எரிபொருள் பற்றாக்குறை நாட்டில் நிலவுவதால், அத்தியாவசிய சேவைகளை மாத்திரம் எதிர்வரும் 10ஆம் திகதி வரை முன்னெடுப்பது என்ற தீர்மானம் அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

அதன்பின்னர் நாடு வழமைக்கு திரும்பி விடும் எனும் அடிப்படையில்தான் அந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கு, நான் கூறிவருவது போன்று இந்தியாவிலிருந்து அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதன் ஊடாக வடக்கு மாகாணம் அதற்கு மேலாக வடமத்திய மாகாணம் நன்மையை பெறும். அது விரைவில் நடைபெறும் என நம்புகிறேன் எனத் தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து பொருட்களை ஏற்றி வருவது தொடர்பில் அமைச்சரவையில் ஆதரவு கிடைத்துள்ளதா என ஊடகவியலாளர் ஒருவர் வினவினார். அதற்கு பதிலளித்த அமைச்சர்,

அதில் எவ்விதமான தடையும் இல்லை. கடைசியாக பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவை என்று கூறப்பட்டது. அதுவும் பெறப்பட்டுள்ளது. ஆனால், நாணயமாற்று விடயத்தில் மாத்திரமே சில நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அவை நிறைவடைந்ததும் எமது மக்களுக்கு தேவையான பொருட்களை ஏற்றிய படகு இந்தியாவில் இருந்து காங்கேசன்துறையை நோக்கிப் புறப்படும்" என்று தெரிவித்தார்.

அத்துடன், கிளிநொச்சி மாவட்டத்தில் அத்தியாவசிய சேவைகளை சீராக மேற்கொள்வது தொடர்பாக மாவட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரசாங்கத்தின் வேலைத் திட்டங்கள் அனைத்தும் எமது மக்களின் தேவைகளுக்கு ஏற்ற வகையிலும், எமது பிரதேசங்களின் தன்மைகளுக்கு ஏற்பவும் ஒழுங்கமைக்கப்பட வேண்டும் எனவும் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்.

வெறிச்சோடிய நகர...

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் இருக்கும் சொற்பளவிலான எரிபொருளை அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் விநியோகிப்பது என அரசாங்கம் தீர்மானித்தது.

இந்த தீர்மானம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. எதிர்வரும் ஜூலை 10ஆம் திகதி வரை அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே எரிபொருள் விநியோகிக்கப்படும் எனவும் தனியார் வாகனங்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்பட மாட்டாது எனவும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்திருந்தார்.

துறைமுகம், சுகாதாரத்துறை, அத்தியாவசிய உணவுப்பொருள் விநியோகம் உள்ளிட்ட துறைகளுக்கு மாத்திரமே இந்த காலப்பகுதியில் எரிபொருள் விநியோகிக்கப்படும் எனவும் அவர் கூறியிருந்தார். அரசாங்கத்தின் அறிவிப்பு நேற்று முன்தினம் முதல் நடைமுறைக்கு வந்துள்ளதால், நாடு முழுவதும் வீதிகளில் வாகன போக்குவரத்து, மக்களின் நடமாட்டங்கள் வெகுவாக குறைந்துள்ளன.

தம்புள்ளையில் எரிபொருள்...

எனினும், வரிசையில் நின்றிருந்த பொது மக்கள் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வாகனங்களுக்கு பெற்றோல் வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதனையடுத்து, தம்புள்ளை ஏ.எஸ்.பி. அலுவலகத்திற்கு தமது வாகனங்களை எடுத்துச் சென்ற வெளிநாட்டவர் குழுவொன்று தம்புள்ளை உதவி பொலிஸ் அத்தியட்சகர் சந்தன விஜேசேகரவிடம் சுற்றுலாப் பயணிகளுக்கு எப்படியாவது எரிபொருள் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தம்புள்ளை தலைமைய உதவி பொலிஸ் அத்தியட்சகர் ருஷாந்த பெரேராவுடன் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்குச் சென்ற தம்புள்ளை உதவி பொலிஸ் அத்தியட்சகர் சந்தன விஜேசேகர, அங்கு காத்திருந்த வெளிநாட்டவர்களுக்கு தலா 10 லீற்றர் பெற்றோலை வழங்குமாறு எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளரிடம் கோரிக்கை விடுத்தார்.

எனினும், இவர்களுக்கு எரிபொருளை வழங்குவதில் தமக்கு ஆட்சேபனை இல்லை என்றும் ஆனால் மக்கள் எதிர்ப்பை சம்பாதிக்க விரும்பவில்லை என்றும் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து ஏ.எஸ்.பி. சந்தன விஜேசேகர, வெளிநாட்டவர்கள் எரிபொருளைப் பெறுவதற்கு உதவுமாறும் எரிபொருள் எடுக்க வந்த மக்களிடம் கோரிக்கை விடுத்ததால், சம்பவ இடத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

எவ்வாறாயினும், பொலிஸாருக்கு ஒதுக்கப்பட்ட எரிபொருளின் ஒரு தொகையை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்குமாறு எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுக்கு ஏ.எஸ்.பி அறிவுறுத்தினார்.

அதன்படி, வரையறுக்கப்பட்ட எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

உறுதியளித்ததை...

டொலர்களை உள்ளீர்ப்பதற்கான வழி முறைகளையும் பட்டியலிட்டுள்ளார். வங்குரோத்தடைந்த கம்பனிகளை பொறுப்பேற்று, அதனை கட்டியெழுப்பும் நிர்வாகத் திறன் என்னிடமுள்ளது.

மக்கள் பட்டினியால் வாடினால், நாம் மட்டும் உண்பதில் அர்த்தம் இல்லை. ஆக, சென்று எதையாவது செய் எனக்கூறியே - அம்மா என்னை நாடாளுமன்றம் அனுப்பி வைத்தார்.

06 மாதங்களுக்குள் உங்களாலும் முடியாவிட்டால் பதவி துறந்து வாருங்கள் என மனைவியும் அறிவுரை வழங்கியுள்ளார். அதேபோல சொன்னதை செய்யாவிட்டால் 'தாத்தா கம் ஹோம்' (அப்பா வீடு திரும்புங்கள்) - என பதாகை ஏந்தப்படும் என பிள்ளைகளும் அறிவித்து விட்டனர்.

அந்தவகையில், எனக்கான காலம் 06 மாதங்கள். அதாவது, 960 மணித்தியாலங்களே எனக்கு வேலை செய்வதற்கான நேரம். அந்த காலப்பகுதிக்குள் முன்னேற்றகரமாக எதையாவது செய்யாவிட்டால், தாத்தா கம் ஹோம் எனக்கூறி பிள்ளைகள் எனது வீட்டுக்கு முன்வந்து விடுவார்கள். அப்போது எனக்கு வீடு செல்ல வேண்டிவரும்.

என்னைபோல் ஒருவருக்கு 06 மாதங்களுக்குள் மக்களுக்கு முன்னேற்றகரமான (பொசிடிவ்வாக) எதையாவது செய்ய முடியாவிட்டால், பதவி வகித்து என்ன பயன்?" வங்குரோத்தடைந்த கம்பனிகளை பொறுப்பேற்று, அதனை கட்டியெழுப்பும் நிர்வாகத் திறன் உள்ள எனக்கு, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி சவாலையும் வெற்றிகொள்ள முடியும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

தமிழன் வாசகர்களே!
தமிழன் இணையத்தளத்தில்
வெளியாகும் செய்திகளை
www.thamilan.lk
ஊடாக மாத்திரமின்றி
www.thamilannews.com
மூலமாகவும் உடனுக்குடன்
அறிந்துகொள்ளலாம்
தமிழன் தமிழன்

இன்றே பதிவு செய்யுங்கள்
தமிழன்
தமிழன்
ஜனனியுர்
தமிழ் முரசு
E-PAPER ஐ பார்வையிடலாம்
epaper.thamilan.lk
SUBSCRIBE NOW

தமிழன் குறுஞ்செய்திகளை
உடனுக்குடன் பெற...
பதிவு செய்வதற்கு
Dialog மாவையாளர்கள்...
Thamilan என்று Type செய்து
7172 என்ற இலக்கத்துக்கு SMS செய்க
SLT MOBITEL The Connection மாவையாளர்கள்...
REG(இடைவெளி)Thamilan
என்று Type செய்து 77111 என்ற
இலக்கத்துக்கு SMS செய்க
airtel மாவையாளர்கள்...
திங்கள்:
ACT(இடைவெளி)TAM1
என்று Type செய்து 7544 என்ற
இலக்கத்துக்கு SMS செய்க
மாதாந்தம்:
ACT(இடைவெளி)TAM
என்று Type செய்து 7544 என்ற
இலக்கத்துக்கு SMS செய்க
தமிழன்
மாதமொன்றுக்கு ரூ.30 + வரி அடங்கலாக

வடமராட்சி வடக்கு கிராம அலுவலர்கள் எரிபொருள் வழங்கக் கோரி போராட்டம்

யாழ். வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர்கள் தமக்கு எரிபொருள் வழங்குமாறு கோரி நேற்று (28) கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுகயீன விடுப்புப் போராட்டத்தில் நேற்று முன்தினம் (27) ஈடுபட்ட குறித்த கிராம அலுவலர்கள், நேற்று (28) வடமராட்சி வடக்கு - பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், கிராம அலுவலர் அத்தியாவசிய அலுவலரா? அநாவசிய அலுவலரா?, கொவிட் காலத்தில் அத்தியாவசிய அலுவலர்; பொருளாதார நெருக்கடி காலத்தில்...?, எரிபொருள் விநியோகத்தில் கிராம அலுவலர்களைப் புறக்கணிக்காதீர்கள் போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

பதிவுசெய்யப்பட்ட அரசியல் கட்சிகளுடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கலந்துரையாடல்

தற்போதைய நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள நாட்டைக் கட்டியெழுப்புவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்ட அரசியல் கட்சிகளுடன் தொடர் கலந்துரையாடல்களை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு, இதன் முதற்கட்ட வேலைத்திட்டம் நேற்று (28) கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஆரம்பமானது.

இதன்போது கருத்து தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,

அரசாங்கம் நாட்டை பாரிய அவலநிலையை நோக்கியே இட்டுச்சென்றுள்ளது. இதற்கு எதிராக ஜனநாயக ரீதியான மக்கள் எழுச்சி உருவாக்கப்படும். இதனை இலக்காகக்கொண்டு பாரிய அரசியல் பிரவேச இயக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு சகல கட்சிகளுடனும் கலந்துரையாடவுள்ளோம். அரசாங்கத்தை அகற்றும் வரை இந்த மக்கள் போராட்டம் ஓயாது.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்களின் இருக்கைகளைப் பாதுகாப்பது மட்டுமே அரசாங்கத்தின் அத்தியாவசிய சேவையாகும். இவ்வாறான நிலையில் நாட்டு மக்கள் பாரிய துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

செயற்பட முடியாத அரசாங்கம் பதவி விலக வேண்டும். அதன் பின்னர் ஐக்கிய மக்கள் சக்தி இந்நாட்டை கட்டியெழுப்பும் அரசாங்கம் அமைக்கப்படும் - என்றார்.

இந்நிகழ்வில் நவ லங்கா நிதகல் பக்ஷய, பிரஜைகள் முன்னணி, ஐக்கிய இடதுசாரி முன்னணி, எங்கள் மக்கள் சக்தி கட்சி உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

லெபனானின் ஐ.நா. இடைக்காலப் படையின் தூதுவர் லெபனானுக்கான இலங்கை தூதுவர் ஷானி சந்திப்பு

லெபனானிலுள்ள ஐக்கிய நாடுகளின் இடைக்காலப் படையின் தூதுவர் மற்றும் படைத் தளபதி மேஜர் ஜெனரல் அரோல்டோ லாசாரோவை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.

லெபனானுக்கான இலங்கைக் தூதுவர் ஷானி கல்யாணரத்ன கருணாரத்ன, லெபனானிலுள்ள ப்ளூ லைனிலுள்ள ஐக்கிய நாடுகளின் இடைக்காலப் படையின் தலைமையகத்தில் தூதுவர் மற்றும் படைத் தளபதி மேஜர் ஜெனரல் அரோல்டோ லாசாரோவை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.

லெபனானிலுள்ள ஐக்கிய நாடுகளின் இடைக்காலப் படையில் இலங்கைப் படைகளை அதிகரித்தல் உள்ளிட்ட பரஸ்பர நலன்கள் குறித்து அவர்கள் கலந்துரையாடினர். இலங்கைப் படையினரின் சிறந்த நிபுணத்துவத்திற்கே மதிப்பளிக்கப்படுவதாகவும், கடந்த 11 வருடங்களாக லெபனானிலுள்ள ஐக்கிய நாடுகளின் இடைக்காலப் படைக்கு அவர்கள் ஆற்றிய பங்களிப்புக்காக நன்றி தெரிவிப்பதாகவும் படைத் தளபதி தெரிவித்தார்.

13ஆவது படை பாதுகாப்பு நிறுவனத்தின் இலங்கை லெப்டினன்ட் கேர்னல் நயன் சமரகோன் மற்றும் துூதரகத்தின் இணைப்பாளர் பிரியந்த தசநாயக்க ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

துூதுவருக்கு கௌரவ பாதுகாப்பு வழங்கப்பட்டதுடன், படையினர் மற்றும் கவச வாகனங்கள் ஆய்வுசெய்யப்பட்டன. இலங்கை இராணுவ கலிப்சோ இசைக்குழுவின் கேகே அணிவகுப்பு மற்றும் இசை நிகழ்ச்சியும் இடம்பெற்றன.

பதுக்கிவைக்கப்பட்ட 900 லீற்றர் டீசல் பொலிஸாரால் மீட்பு

(புத்தளம் நிருபர்)

மாராவில, தும்மோதர பகுதியில் சட்டவிரோதமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 900 லீற்றர் டீசல் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலொன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே மேற்படி டீசல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

மாராவில, தும்மோதர பகுதியில் மனல் சேகரிக்கும் இடமொன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே மேற்படி டீசல் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட டீசல் மூன்று இலட்சத்திற்கும் கூடுதலான பெறுமதியுடையது எனத் தெரிவித்த மாராவில பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தில் மீண்டும் நாடுகளுக்கிடையிலான சேவைகள் ஆரம்பம்

யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தின் நாடுகளுக்கிடையிலான தொழிற்பாடுகளை எதிர்வரும் முதலாம் திகதிமுதல் ஆரம்பிப்பதற்கு முன்வைக்கப்பட்டுள்ள படிமுறைகளுக்கு அமைச்சரவை உடன்பாடு வெளியிடப்பட்டுள்ளது.

அடிப்படை சர்வதேச ஒழுங்குபடுத்தல் தேவைகளை உறுதிப்படுத்திக்கொண்டு யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தின் நாடுகளுக்கிடையிலான தொழிற்பாடுகள் 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

பின்னர் கொவிட் -19 தொற்று காரணமாக 2020 மார்ச் மாதம்முதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

தென்னிந்திய விமான நிலையம் வரை வாடகை விமானத் தொழிற்பாடுகள் மற்றும் நேர அட்டவணைக்கமைய, விமானப் பயணங்களை மேற்கொள்வதற்காக சர்வதேச மற்றும் உள்ளூரில் நிறுவப்பட்டுள்ள விமான நிறுவனங்கள் தற்போது கோரிக்கையை முன்வைத்துள்ளன.

இந்நிலையில், துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இதற்கான படிமுறைகளை முன்வைத்திருந்தார். அதற்கு அமைச்சரவையில் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முதலீட்டாளர் என்ற போர்வையில் வர்த்தகர்களின் காணிகளை கையகப்படுத்தும் இந்தியப் பிரஜை

போதைப்பொருள் கடத்தல்களுடனும் தொடர்பிருப்பதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணை

(ஹேமந்த லியனபத்திரன்)

முதலீட்டு வலயத்தில் வர்த்தகத்தில் ஈடுபடும் முதலீட்டாளர் என்ற போர்வையில் கொழும்பு வர்த்தகர்களின் காணிகளை கையகப்படுத்தல் மற்றும் போதைப்பொருள் கடத்தல்களுடன் தொடர்புடைய ராஜா என்ற இந்தியப் பிரஜை தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்நபர் இலங்கையில் தங்கியிருப்பதற்கு, விசா வழங்கப்பட்ட விதம் தொடர்பில் குடிவரவு-குடியகல்வுத் திணைக்களத்திடம் அறிக்கை கோரப்பட்டுள்ளது.

மேற்படி சந்தேகநபர், வெளிநாட்டு உளவுப் பிரிவுகளின் உளவாளியாக செயற்படுவதாகத் தெரிவித்து, ஓய்வுபெற்ற பொலிஸாருடன் இணைந்து பல்வேறு கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்துள்ளதாக விசாரணைக் குழுவுக்கு தகவல் கிடைத்துள்ளது.

கொழும்பு நவம் வீதி மற்றும் கொழும்பு 7இல் அமைந்துள்ள பில்கட் நிறுவனமொன்றின் உரிமையாளருக்கு உரித்தான உடைமைகளை பலவந்தமாக குறித்த நபர் கையகப்படுத்தியுள்ளதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்நபர் பிரபல அரசியல் பிரமுகர்களின் செயலாளர்களுக்கு உயர் ரக கார்களை பரிசளித்து சில காலம் அடைக்கலம் பெற்றுவந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

குறித்த சந்தேகநபர் தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

28.06.2022 நாணய மாற்று வீதம்

இலங்கை மத்திய வங்கி CENTRAL BANK OF SRI LANKA

நாணயம்	கொள்வனவு வீதம்	விற்பனை வீதம்
அவுஸ்திரேலியன் டொலர்	133 6130	145 2656
கனேடியன் டொலர்	163 6515	176 5262
சீன யுவான் (ரென்மின்பி)	41 2 51	44 3 47
யூரோ	263 861	278 7674
ஜப்பான் யென்	1 5074	1 6166
சிங்கப்பூர் டொலர்	144 5811	155 1472
ஸ்ரேலிங் பவுன்	324 377	341 0838
சுவிஸ் பிராங்ங்	26 7172	276 2 54
ஐ.அ.டொலர்	245 523	256 1144

நாடு	நாணயம்	விற்பனை வீதம்
பஹ்ரைன்	பஹ்ரைன் தினார்	843 5 28
குவைட்	குவைட் தினார்	0,062 6353
ஓமான்	ஓமான் றியால்	823 6820
கட்டார்	கட்டார் றியால்	87 3056
சவூதி அரேபியா	சவூதி அரேபிய றியால்	84 7753
ஐக்கிய அரபு இராச்சியம்	ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம்	86 8715

மின்சார கட்டண திருத்தம் தொடர்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்மொழிவுகள்

மின் கட்டண அதிகரிப்பு தொடர்பில் மின்சார சபை முன்வைத்த முன்மொழிவுகளுக்கு பதிலளிக்கும் வகையில் குறித்த கட்டணங்கள் திருத்தப்பட்டு, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்மொழிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி, 1 முதல் 30 அலகு வரையிலான வீட்டு மின்சார உபயோகத்திற்கான தற்போதைய மாதாந்த நிலையான கட்டணமான 30 ரூபாவை 150 ரூபாவாக அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளன.

அதற்கு இலங்கை மின்சார சபை 430 ரூபாவை முன்மொழிந்திருந்தது.

மேலும், தற்போது 1 முதல் 30 அலகுக்கு இடையில் 2 ரூபா 50 சதங்களாக உள்ள அலகொன்றின் கட்டணத்தை 8 ரூபாவினால் அதிகரிக்க இலங்கை மின்சார சபை முன்வைத்த முன்மொழிவுக்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இணக்கம் தெரிவித்துள்ளது.



Scenario

Rates

7. Domestic Purposes

Domestic	Existing		Scenario	
	Energy rates (EUR/kWh)	Fixed charge (EUR/month)	Energy rates (EUR/kWh)	Fixed charge (EUR/month)
0-30	2.50	30.00	5.00	150.00
31-60	4.85	30.00	10.00	300.00
61-90	7.85		12.00	
61-90	10.00	30.00	12.00	
91-120	22.70		12.00	450.00
121-180	32.00	450.00	30.00	1,350.00
180+	45.00	450.00	45.00	1,500.00
			50.00	1,850.00
Time of Use		540.00		
Peak	54.00			1,200.00
Day	25.00		54.00	
Off-peak	18.00		36.00	
			17.00	

இதேவேளை, 31 தொடக்கம் 60 அலகுகளுக்கு இடைப்பட்ட நிலையான மின் கட்டணத்தை 1,100 ரூபாவினால் அதிகரிக்க இலங்கை மின்சார சபை முன்மொழிந்த போதிலும், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு 300 ரூபாவை அதிகரிக்க முன்மொழிந்துள்ளது.

அத்துடன், தற்போது 4 ரூபா 85 சதமாக உள்ள 31 தொடக்கம் 60 அலகுகளுக்கு இடைப்பட்ட மின்சார அலகு ஒன்றின் விலையை 12 ரூபா 50 சதங்களால் அதிகரிக்கவேண்டுமென இலங்கை மின்சார சபை பரிந்துரைத்துள்ளபோதிலும், கட்டணத்தை 10 ரூபாவினால் மாத்திரமே அதிகரிக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

வண்ணாத்திவில்லு களஞ்சியசாலை விவகாரம்;

சந்தேகநபர்கள் நால்வருக்கு தலா 20 இலட்சம் ரூபா சரீரப் பிணை

(புத்தளம் நிருபர்)

புத்தளம் வண்ணாத்திவில்லு லெக்ட்டோ தோட்ட டெடிபொருட்கள் மீட்பு தொடர்பில் கைதுசெய்யப்பட்டு கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக தடுத்துவைக்கப்பட்டிருந்த புத்தளத்தை சேர்ந்த நால்வருக்கு நேற்று (28) பிணை வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான வழக்கு விசாரணைகள் புத்தளம் மேல் நீதிமன்றில் மூவரடங்கிய நீதிபதிகள் முன்னிலையில் ட்ரயல் அட்பார் விசாரணைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில், சந்தேக நபர்கள் நால்வருக்கும் இவ்வாறு பிணை வழங்கப்பட்டுள்ளன.

புத்தளம் வண்ணாத்திவில்லு லெக்ட்டோ தோட்ட டெடிபொருட்கள் மீட்பு தொடர்பில் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த ஆறு சந்தேக நபர்களுள் முதலாம், இரண்டாம், ஐந்தாம் மற்றும் ஆறாம் சந்தேக நபர்களுக்கே நேற்று புத்தளம் மேல்நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டது.

மேற்படி சந்தேக நபர்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ருஸ்தி ஹபீப் மற்றும் முஹம்மது சஜாத், நஸீஹா அப்பாஸ், முஹம்மது அத்னான், முஹம்மது அல்தாப் ஆகியோர் பிணை கோரும் பிணை விண்ணப்பத்தினை சமர்ப்பித்திருந்தனர்.

இதனை பரிசீலனை செய்வதற்கான மூவரடங்கிய நீதிபதினர் வேண்டியிருந்தனர். இதனடிப்படையிலேயே இவர்களுக்கான பிணை வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நபர்களுக்கு தலா ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையும், தலா இருபது இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப்பிணைகளிலும் சந்தேக நபர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் இந்த வழக்கில் மூன்றாவது சந்தேக நபராக பெயரிடப்பட்டுள்ள நபர் சார்பில் சட்டத்தரணிகளால் பிணை கோரப்பட்ட போதிலும் அவர் சார்பில் கோரப்பட்ட பிணை விண்ணப்பம் நீதிபதிகளால் இதன்போது நிராகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த வழக்கில் நான்காவது சந்தேக நபராக பெயரிடப்பட்டவர் சார்பில் எதிர்வரும் நாட்களில் பிணை கோரும் விண்ணப்பம் தாக்கல் செய்யப்படவுள்ளதாக சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

இதுதொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 24ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது. புத்தளம் மேல்நீதிமன்ற வரலாற்றில் மேற்படி வழக்கு விசாரணையே ட்ரயல் அட்பார் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மிகப்பெரிய பொருளாதாரச் சுமையை தாங்கிய வண்ணம் நாட்டு மக்கள் பட்டினியுடன் நடுத்தெருவில் நிற்கின்றனர். ஆனால், அரசியல்வாதிகள் பலரது நடவடிக்கைகளைப் பார்க்கும்போது உண்மையில் அவர்கள் இந்த நாட்டில்தான் இருக்கிறார்களா என எண்ணத் தோன்றுகிறது.

பொருளாதார நெருக்கடி நாட்டின் அனைத்துத் தரப்பினரையும் பாதித்திருக்கிறது. வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்வர்கள் ஒருவேளை உணவுக்கே கையேந்த வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இவற்றுக்கெல்லாம் ஒன்றிணைந்து தீர்வைப் பெற்றுக்கொடுக்க முயற்சிக்காமல் ஒருவருக்கொருவர் குற்றஞ்சுமத்துவதும், அதில் அரசியல் இலாபம் தேட முயற்சிப்பதுமாக அரசியல்வாதிகள் காலம் கடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அண்மைக்காலமாக அரசாங்கத்தை விமர்சித்து வருகிறார். இந்த அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது. இந்த சந்தர்ப்பத்தில் விமர்சன அரசியல் அவசியம்தானா?

மூன்று நாடுகள் எரிபொருளை பெற்றுத்தர சம்மதித்துள்ளதாக கூறியுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அதிகாரம் தமக்கு வந்தால் மாத்திரமே அதனைச் செய்ய முடியும் என்றவாறு சூட்சுமமாக உள்ளர்த்தத்தோடு பேசியிருக்கிறார்.

"மக்களின் தேவைகளை நிறைவேற்ற முடியாவிட்டால் ட்விட்டர் செய்திகள் மூலம் மன்னிப்பு கேட்காமல் உடனடியாக அரசாங்கம் பதவி விலகவேண்டும். அவ்வாறு பதவி விலகும் பட்சத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் திறமையான நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு நாட்டை பொறுப்பேற்போம். கோடிக்கணக்கான மக்களின் ஜனநாயக அபிப்பிராயத்தின்படி அடுத்த ஐந்து ஆண்டு காலத்துக்குள் நாட்டை மீண்டும் பழைய நிலைமைக்கு நிச்சயம் கொண்டுவருவோம். மோசடி அல்லது ஊழலுக்கு எமது ஆட்சியில் இடமிருக்காது.

ஒரு சுப்பர் பிரதமரைக் கொண்டுவந்து நாட்டைக் கட்டியெழுப்ப அரசாங்கம் நடத்திய பொய் நாடகங்கள் அனைத்தும் தற்போது நாட்டு மக்களிடம் அம்பலமாகியுள்ளன. ஐந்து மாதங்களில், பத்து மாதங்களில் நாட்டைக் கட்டியெழுப்புவோம் எனக் கூறும் பாலியான ஏமாற்று நூல் நிலைமைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவற்றுக்கு பதிலளிக்கும் வகையில் அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவின் கருத்துகள் அமைந்துள்ளன.

நாடு நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கும் இந்த நேரத்தில் குற்றஞ்சுமத்தி எதிர்ப்பு அரசியலை நடத்துவதை விடுத்து பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இணைந்து செயற்படுவதே காலத்தின் தேவை என அவர் கட்டிக்காட்டியுள்ளார்.

எரிபொருளை தன்னால் பெற்றுத்தர முடியும் எனக் குறிப்பிட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் முடிந்தால் அதனைச் செய்யுமாறும் சவால் விடுத்துள்ளார்.

மக்களின் குரல் நியாயமானது. கோட்டா கோ என்ற கோஷத்துடன் இளைஞர்கள் தொடர்ச்சியாக போராடி வருகிறார்கள். நாமும் அவர்களின் நிலைப்பாட்டில்தான் இருக்கிறோம். ஆனாலும், நாடு இக்கட்டான சூழ்நிலையில் இருக்கும்போது விமர்சனங்களை நிறுத்திவிட்டு நாட்டைக் காப்பாற்ற முன்வர வேண்டும்.

இது சவாலானதுதான். ஆனால், மக்களுக்காக அந்தச் சவாலை ஏற்க அரசியல்வாதிகள் முன்வர வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஹரீனின் கருத்தில் நியாயம் உண்டு. கையிருப்பில் பணம் இல்லாதபோது தேர்தல் நடத்துவதென்பது எந்தவகையிலும் சாத்தியமற்றது. அதற்கு பொருத்தமான சூழல் நாட்டில் கிடையாது. இந்நிலையில், அதிகாரம் கிடைத்தால் மாத்திரமே நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்போம் என்ற வகையிலான எதிர்க்கட்சியினரின் சொல்லாடல்களை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

எதிர்க்கட்சியினர் தங்களிடமுள்ள திட்டமிடல்களை அரசாங்கத்துக்கு முன்வைக்க வேண்டும். அவை அமுல்படுத்தப்படாத பட்சத்தில் விமர்சனங்களை முன்வைப்பதில் தவறில்லை. அதைவிடுத்து வெறும் வாய்ச்சொல்லில் வீரர்களாக மக்கள் மத்தியில் தம்மை சுதாநாயக்கள் போல காட்ட முற்படுவது ஏமாற்றுவித்தையாகும்.

பேரழிவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் நாட்டை ஒற்றுமையாக இருந்து அதனைத் தடுக்க வேண்டும். இல்லாவிடின் நாம் அனைவரும் எதிர்கொள்ளப்போகும் அபாயத்திலிருந்து எந்த வழியிலும் மீள முடியாமற்போகும் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறோம்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, வீரேரோம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 86 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஜூன் 29ஆம் திகதி, புதன்கிழமை

வாய்ச்சொல்லில் வீரர்கள்!

சாஸ்திர விளையாட்டை நிறுத்தி, நாடு இழந்த நன்மதிப்பை மீட்டெடுக்க மக்களின் கோரிக்கைக்கு செவிசாய்த்து அரசாங்கம் பதவி விலக வேண்டும்" என்று சஜித் பிரேமதாச நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

மறுபுறம், ஆறு மாதங்களில் மாற்றத்தை கொண்டுவருவதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் நிர்வாகத்திறன் மற்றும் ஊழல் காரணமாகவே பின்தங்கிய

அமைச்சரவைத் தீர்மானங்கள்

2022.06.29 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

அமைச்சரவை முடிவுகள்
CABINET DECISIONS
அரசாங்க தகவல் திணைக்களம்
Department of Government Information

01. ஜனநாயக, சுபீட்சமான மற்றும் இடர்களை எதிர்கொள்ளக் கூடிய இயலுமை கொண்ட இலங்கைக்கான வேலைத்திட்டம்

ஜனநாயக நல்லாட்சி மற்றும் ஒருமைப்பாட்டுக்கான ஒத்துழைப்புகளை வலுப்படுத்தும் வேலைத்திட்டம் மற்றும் காப்பீட்டுப் பொருளாதார விருத்தியை ஏற்படுத்தும் வேலைத்திட்டம் ஆகியவற்றுக்குத் தேவையான நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை அரசாங்கம் மற்றும் ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்திற்கும் இடையே 2011 ஆம் ஆண்டில் இரண்டு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டுள்ளதுடன், அதற்கமைய, குறித்த இரண்டு வேலைத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

வினைத்திறனான ஜனநாயக ஆட்சி, காப்பீட்டு சந்தை அடிப்படையிலான விருத்தி மற்றும் இடர்கள் மற்றும் அழுத்தங்களுக்கு முகங்கொடுக்கத் தேவையான வளங்களைப் பலப்படுத்தல் போன்ற துறைகளில் அடிப்படைக் கவனத்தைச் செலுத்தி ஜனநாயக, சுபீட்சமான மற்றும் இடர்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய இயலுமை கொண்ட இலங்கைக்கான வேலைத்திட்டம் எனும் பெயரில் புதிய வேலைத்திட்டமொன்றை 2026 ஆம் ஆண்டு வரைக்கும் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் 57 மில்லியன் அமெரிக்க டொலர்களை சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவரான்மை நிறுவனத்தின் (USAID) மூலம் பெற்றுக்கொள்வதற்கான புதிய ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கமைய குறித்த வழங்கலைப் பெற்றுக்கொள்வதற்காக பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக பிரதமர் சமர்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

02. யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தின் நாடுகளுக்கிடையிலான தொழிற்பாடுகளை மீண்டும் ஆரம்பித்தல்

அடிப்படை சர்வதேச ஒழுங்குபடுத்தல் தேவைகளை உறுதிப்படுத்திக் கொண்டு யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தின் நாடுகளுக்கிடையிலான தொழிற்பாடுகள் 2019 நவம்பர் மாதம் 11 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டாலும், கொவிட்-19 தொற்று நிலைமையால் அதன் நடவடிக்கைகள் 2020 மார்ச் மாதம் 15 ஆம் திகதி வரை தற்காலிகமாகப் பிற்போடப்பட்டுள்ளன. அவ்விமான நிலையத்திலிருந்து தென்னிந்திய விமான நிலையம் வரை வாடகை விமானத் தொழிற்பாடுகள் மற்றும் நேர அட்டவணைக்கமைவான விமானப் பயணங்களை மேற்கொள்வதற்காக சர்வதேச நீதியாகவும் உள்ளூரிலும் நிறுவப்பட்டுள்ள விமானக் கம்பனிகள் தற்போது வேண்டுகோள்களைச் சமர்ப்பித்துள்ளன.

அதற்கமைய, யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தின் நாடுகளுக்கிடையிலான தொழிற்பாடுகளை 2022 ஜூலை மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பித்தல் தொடர்பாக துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து சேவைகள் அமைச்சரால் மேற்கொள்ளப்பட்டுள்ள படிமுறைகள் தொடர்பாக அமைச்சரவை உடன்பாடு தெரிவித்துள்ளது.

03. புகையிரதப் போக்குவரத்துக் கட்டணங்களைத் திருத்தம் செய்தல்

அரச கொள்கைகளுக்கு அமைய பயணிகள் போக்குவரத்துக்காக இலங்கைப் புகையிரதத் திணைக்களம் சலுகை அடிப்படையிலான கட்டண முறையைப் பின்பற்றிவருகின்றது. ஆனாலும், அன்மைக் காலங்களில் எரிபொருள் விலையில் ஏற்பட்ட அதிகரிப்புகளால் திணைக்களத்தின் மீண்டெழும் நட்டங்கள் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டு செல்கின்றமையால், திருப்திகரமான புகையிரத சேவைகளை மேற்கொண்டு செல்வதற்கு இயலுமை கிட்டும் வகையில் திணைக்களம் ஈட்டுகின்ற வருமானத்தை அதிகரிக்க வேண்டியுள்ளது.

அதற்கமைய, ஐந்து (05) வருடங்களுக்கும் மேலாக திருத்தம் செய்யப்படாத புகையிரதப் பயணிகள் போக்குவரத்துக் கட்டணம், பதினான்கு (14) வருடங்களுக்கு மேலாக திருத்தம் செய்யப்படாத சரக்குகள் போக்குவரத்து மற்றும் தபால் போக்குவரத்து நடவடிக்கைகள் மற்றும் ஏனைய சரக்குகள் போக்குவரத்துக்காக அறவிடப்படும் புகையிரதக் கட்டணங்களைத் திருத்தம் செய்வதற்காக போக்குவரத்து மற்றும் தெடுஞ்சாலைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

04. ஒன்றுபட்டு பயிரிடுவோம் - நாட்டைக் கட்டியெழுப்புவோம் - உணவுப் பயிர் உற்பத்திகள் தேசிய புரட்சி - 2022

தற்போது நாட்டில் உணவுப் பாதுகாப்பு தொடர்பாக மேலெழுந்துள்ள பிரச்சினைகளுக்குத் துரிதமாகத் தீர்வு காண்பதற்காக விவசாய அமைச்சின் தலைமையின் கீழ் அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள், புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சு உள்ளிட்ட ஏனைய அமைச்சுக்களையும் இணைத்துக் கொண்டு அனைத்து அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்புக்களுடன் நாடளாவிய ரீதியில் முறைசார் மற்றும் துரிதமாக உணவுப் பயிர் உற்பத்திகள் தேசிய வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்த வேலைத்திட்டம் விவசாயத் திணைக்களம் மற்றும் மாகாண விவசாய திணைக்களங்களின் தொழிறுப்பு ஒத்துழைப்பின் கீழ் விவசாய அமைச்சின் ஒருங்கிணைப்பில் மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. குறிப்பாக பொத்த விகாரைகள் மற்றும் புளித பூமி, கிறிஸ்தவ தேவாலயங்கள், முஸ்லிம் பள்ளிவாசல்கள் மற்றும் இந்துக் கோவில்களுக்குச் சொந்தமாகவுள்ளதும் பயிரிடக் கூடியதுமான 250,000 ஹெக்டெயர் காணிகளை பயிர்ச்செய்கைகளுக்காகப் பயன்படுத்தி ஒன்றுபட்டு பயிரிடுவோம் - நாட்டைக் கட்டியெழுப்புவோம் - உணவுப் பயிர் உற்பத்திகள் தேசிய புரட்சி - 2022 எனும் பெயரிலான குறித்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர், விவசாய அமைச்சர் மற்றும் புத்தசாசன, மதங்கள் மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சர் ஆகியோர் சமர்ப்பித்துள்ள கூட்டான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

05. பெண் புலம்பெயர் தொழிலாளர்களுக்காக குடும்பப் பிள்ளணி அறிக்கை தொடர்பான தேவையை நீக்கல்

வீட்டுப் பணிகளுக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் புலம்பெயர் பெண் தொழிலாளர்களுக்கு 05 வயதுக்குக் குறைவான பிள்ளைகள் இன்மையை உறுதிப்படுத்தும் நோக்கில் தற்போது நிலவுகின்ற குடும்பப் பின்னணி அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய கட்டாயத் தேவை இருப்பதால், பெண்களின் உரிமைகள் மீறப்படுவதாக பெண்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சர்வதேச அறிக்கைகள் பலவற்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவ்வாறே ஒருசில சந்தர்ப்பங்களில் குறித்த அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்காக தேவையான அனைத்துத் தகவலைகளையும் பூர்த்தி செய்திருப்பினும், ஒருசில அலுவலகர்கள் பல்வேறு காரணங்களால் குறித்த அறிக்கையைத் தாமதப்படுத்துவதால் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக செல்வதற்கு எதிர்பார்க்கின்ற பெண்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையை சமர்ப்பிதற்குத் தகைமையற்ற ஒருசில பெண்கள் வேறு சட்டவிரோத வழிமுறைகளைக் கையாண்டு எந்தவொரு கண்காணிப்புமின்றி வெளிநாடுகளுக்குச் சென்று பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ள சம்பவங்களும் பதிவாகியுள்ளன. இது தொடர்பாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரால் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விடயங்களைக் கருத்திற் கொண்டு, இரண்டு (02) வயதோ அல்லது அதற்கு மேற்பட்ட பிள்ளைகள் உள்ள பெண்கள் வேலைவாய்ப்புக்களுக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும்போது கட்டாயமாகக் கும்பப் பின்னணி அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் எனும் தேவையிலிருந்து விடுவிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

06. சிறுவர்கள் மற்றும் இளையவர் தொடர்பான கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்

சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் சமவாயத்தில் 18 வயதுக்குக் குறைவான எந்தவொரு பிள்ளையும் சிறுவர் எனப் பொருள்கோடல் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த சமவாயத்திற்கு இணங்கியொழுகி குறித்த ஏற்பாடுகளை உட்சேர்த்து சிறுவர்கள் மற்றும் இளையவர் தொடர்பான கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக 2020 செப்டெம்பர் மாதம் 16 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த தீர்மானத்திற்கமைய சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. அதற்கமைய, குறித்த சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

07. சிறுவர் பாதுகாப்பு மற்றும் நீதி தொடர்பாக புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தல்

பாதுகாப்பு மற்றும் காப்பீடுகள் தேவையான நிலைமைகள் தொடர்பாக வழக்கு விசாரணைகளுக்கோ அல்லது சட்டத்தை மீறுகின்ற பிள்ளையொருவருக்கு எதிராக வழக்கு விசாரணைக்காக நீதிமுறை அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் மற்றும் பிள்ளைகள் தொடர்பாக வேறு விதத்தில் நீதிமுறை அதிகாரத்தை செயற்படுத்தும் நீதிமன்றங்களை நிறுவவதற்கு இயலுமை கிட்டும் வகையில் சிறுவர் (நீதிமுறைப் பாதுகாப்பு) தொடர்பான சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக 2015 பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள அடிப்படை சட்டமூலத்திற்காக இரண்டு விசேட நிபுணத்துவக் குழுக்கள் மூலம் ஆராய்ந்து மேலும் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. தற்போது தயாரிக்கப்பட்டுள்ள அடிப்படை சட்டமூலத்தில் குறித்த முன்மொழிவுகளையும் உட்சேர்த்து இறுதிச் சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

08.மோசடிகளைத் தடுக்கும் கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்தல்

நொத்தாரிஸ் கட்டளைச் சட்டம் மற்றும் மரணாதாரன கட்டளைச் சட்டங்களுக்காக மேற்கொள்வதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள திருத்தங்களுக்கு இணங்கியொழுகும் வகையில் மோசடிகளைத் தடுக்கும் கட்டளைச் சட்டத்திற்கு ஒருசில விளைவாய்ந்த தன்மையுடைய திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய தேவையைக் கருத்திற் கொண்டு, அதற்கான சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக 2021 ஒக்டோபர் மாதம் 18 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

09. அற்றோனித் தத்துவ உரிமப்பத்திர கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்தல்

போலியாகவும் மற்றும் சட்ட விரோதமாகவும் அற்றோனித்தத்துவ உரிமப்பத்திரத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மோசடிச் செயற்பாடுகளைக் குறைப்பதற்காக அற்றோனித்தத்துவ உரிமப்பத்திர கட்டளைச் சட்டத்திற்கான திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்காக 2021 ஜூலை மாதம் 19 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

10. நீதிமன்றத்தை அவமதித்தல் தொடர்பாக புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்தல்

இலங்கையில் நீதிமன்றத்தை அவமதித்தல் குற்றம், பொருள்கோடல் செய்யப்படாமையால் அவ்வாறான வழக்குகளை விசாரணை செய்வதற்கும், மற்றும் தீர்மானங்களை எடுப்பதற்குப் தெளிவானதும், ஒரே விதமானதுமான முறையொன்று தற்போது பின்பற்றப்படுவதில்லை. அதனால் நீதி வழங்கும் செயன்முறையில் தலையிடும் மட்டுப்பாடுகள் மற்றும் கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரத்தின் கீழ் காணப்படும் மட்டுப்பாடுகள் தொடர்பாகப் புரிந்து கொள்வதில் சிரமங்கள் காணப்படுகின்றன. அதேபோல், நீதிமன்றத்தை அவமதித்தல் தொடர்பாக அன்மைக்காலத்தில் மோசமாக விமர்சனத்திற்குள்ளாகிய வழக்குகள் தொடர்பாகக் கவனத்தில் கொள்ளும் போது அதுதொடர்பான சட்டத்தை மீண்டும் கவனத்திலெடுத்தல் உகந்ததென கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, பொருத்தமான சட்டத்தை அறிமுகப்படுத்தும் நோக்கில் அது பற்றிய விடயங்களை ஆராய்ந்து இலங்கை நீதிச் சேவைகள் ஆணைக்குழுவால் அடிப்படைச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த அடிப்படைச் சட்டமூலத்திற்கமைய சட்டமொன்றை வகுப்பதற்கான சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(11ஆம் பக்கம் பார்க்க)

நக்கல் நமசிவாயம்

இன்றைய நாளில்...

- 1613 – லண்டனில் ஷேக்ஸ்பியரால் ஆரம்பிக்கப்பட்ட குளோப் நாடக அரங்கு தீக்கிரையானது.
- 1814 – மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த ஆறு மதப்பரப்புனர்கள் இலங்கையின் காலி நகரை வந்தடைந்தனர்.
- 1900 – நோபல் பரிசுகளின் நிதி மூலங்களையும், அதன் நிர்வாகத்தையும் "நோபல் அறக்கட்டளை" ஒரு தனியார் நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டது.
- 1914 – சைபீரியாவில் கிரிகோரி ரஸ்புடின் மீது கொலை முயற்சி நடந்தது.
- 1975 – ஸ்டீவ் வாஸ்னியாக் முதலாவது ஆப்பிள் I கணினியை பரிசோதித்தார்.
- 1995 – அட்லாண்டிக் வின்னோடம் ரஷ்ய விண்வெளி நிலையம் மீருடன் முதல் தடவையாக இணைந்தது.
- 2007 – ஆப்பிள் நிறுவனம் தனது முதலாவது ஐ-போன் லெல்லிட்பேசியை அறிமுகப்படுத்தியது.

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முயற்சித்த 47 பேர் கடற்படையினரால் மேற்கு கடற்பரப்பில் கைது

இலங்கையின் மேற்கு கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் இரவு மேற்கொண்டுள்ள ரோந்து நடவடிக்கையின் போது சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக நாட்டிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு வெளியேற முயற்சித்ததாக சந்தேகிக்கப்படும் 47பேர் கொண்ட மீன்பிடி படகொன்று கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளது.

இவங்கை கடற்படை கப்பல் நீர்கொழும்புக்கு அப்பால் மேற்கு கடற்கரையில் ரோந்துப் பணியில் ஈடுபட்டபோது சந்தேகத்திற்கிடமான இலங்கையின் பல நாள் மீன்பிடிக் கப்பலொன்றை அவதானித்து சோதனையிட்டனர். அப்போது சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக இலங்கையில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு வெளியேற முயற்சித்ததாக சந்தேகிக்கப்படும் மோசடியில் ஈடுபட்ட 5பேர் உட்பட 34ஆண்கள், 06பெண்கள் மற்றும் 07குழந்தைகள் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

01 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்ட சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வென்னப்புவ, நாத்தாண்டி, சிலாபம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கொழும்பு துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

ஆட்கடத்தல்காரர்களால் மேற்கொள்ளப் படுகின்ற இவ்வாறான ஆட்கடத்தலில் சிக்கி சட்டவிரோதமான முறையில் நாட்டிலிருந்து வெளியேற முயற்சித்து சட்டத்தின் முன் சிக்குவதை தவிர்க்குமாறு கடற்படை பொதுமக்களிடம் கோருகிறது.

மேலும், பழமையான மற்றும் நீண்ட கடல் பயணத்திற்குப் பொருத்தமற்ற பல நாள் மீன்பிடிக் கப்பல்கள் தொடர்ந்தும் இவ்வாறான மனித கடத்தலுக்குப் பயன்படுத்தப்படுவதாகவும், அவ்வாறான கப்பல்கள் சட்டவிரோதக் குடியேற்றத்தை மேற்கொள்ள முற்பட்டால் அவர்களின் உயிருக்குப் பெரும் ஆபத்து ஏற்படும் எனவும் கடற்படை பொதுமக்களை எச்சரித்துள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பஸ் சேவைகள் இல்லாததால் மஹவ, பலல்ல பகுதியில் பாடசாலை மாணவர்கள் நேற்று ட்ரக்டரில் பயணித்தனர்.

பேருவளை அப்ரார் கல்வி நிலையத்தின் 9ஆவது புலமைப்பரிசில் வழங்கும் வைபவம்

(பீ.எம். முக்தார்)

பேருவளை அப்ரார் கல்வி நிலையத்தின் ஏற்பாட்டிலான 9ஆவது புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் மருதானை அல் பாலியதுல் நஸ்ரியாய முஸ்லிம் மகளிர் கல்லூரி மண்டபத்தில், அப்ரார் கல்வி நிலைய ஸ்தாபகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் பாகிஸ்தான் நாட்டின் இலங்கை உயர்ஸ்தானிகர் ஒய்வுபெற்ற மேஜர் ஜெனரல் உமர் பாருக் பிரதம அதிதியாகவும் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் நிறைவேற்று குழு உறுப்பினரும் சீனன் கோட்டை பள்ளிச்சங்கம் மற்றும் ஜாமியதுல் பாலியதுஷ் ஷாதுலியய்யா கலாபீடம் ஆகியவற்றின் நிர்வாகக் குழு உறுப்பினருமான அஷ்ஷெய்க் இஹ்ஸானுத்தீன் அப்ஹல் ஹஸன் (நளீமி) விஷேட பேச்சாளராகவும் கலந்துகொண்டனர். அப்ரார் கல்வி நிலைய செயலாளர் அல்ஹாஜ் இக்பால் ஸம்ஸரீதீன் நன்றியுரை வழங்கினார்.

பேருவளை நகரபிதா மஸாஹிம் முஹம்மட் வரவேற்புரை நிகழ்த்தினார். பேருவளை பகுதியிலுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் குறைந்த வருமானம் பெறும் சுமார் 50 மாணவர்களுக்கு இந்நிகழ்வில் தமது கல்வியைத் தொடர புலமைப்பரிசில் வழங்கப்பட்டதோடு, அவர்களது பெற்றோருக்கு பாகிஸ்தான் துதரகத்தின் மூலம் பெறுமதிவாய்ந்த அன்பளிப்பு இதன்போது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பேருவளை, மருதானை மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவரும் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவும் பொருளாளருமான கலாநிதி மௌலவி அஸ்வர் அஸாயிதீன், சீனன்கோட்டை பள்ளிச்சங்க இணைச் செயலாளர் எம்.எம்.எம். சிஹாப் ஹாஜியார், பேருவளை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் ஏ.ஆர்.எம். பதியுதீன், சீனன்கோட்டை பெருகமலை ஸாக்கிரீன் பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் அர்ஸத் சவாஹிர், அப்ரார் கல்வி நிலைய பொருளாளரும் ஓய்வுபெற்ற அதிபருமான அல்ஹாஜ் எம்.எல்.ஏ.எம். அப்துல் அஜ்லா உட்பட கல்வி நிலைய உறுப்பினர்கள், நகரசபை உறுப்பினர்கள், உலமாக்கள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், ஊர்பிரமுகர்கள் பலரும் விழாவில் கலந்து கொண்டனர்.

அப்ரார் கல்வி நிலையம் பிரதேசத்திலுள்ள வறிய மாணவர்களின் கல்விக் கண்களை திறந்துவிட ஆற்றும் பணிகளை பாகிஸ்தான் துதுவர் பெரிதும் பாராட்டிப் பேசினார்.

கடந்த ஒன்பது வருடங்களாக மேற்படி கல்வி நிலையம் பிரதேசத்திலுள்ள குறைந்த வருமானம் பெறும் பாடசாலை மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கி வருகின்றனர். புலமைப்பரிசில் பெற்ற பெருமளவிலான மாணவர்கள் உயர்கல்வி மற்றும் பல்கலைக்கழக கல்வியை பூர்த்தி செய்து நாட்டிலும் வெளிநாடுகளிலும் தொழில் செய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர் ஏ.டபிள்யூ.எம். அஜ்வாத் தலைமையிலான இந்த கல்வி நிலையம் மேற்கொள்ளும் புலமைப்பரிசில் வழங்கும் வேலைத்திட்டத்திற்கு முஸ்லிம் நாடுகளின் துதுவரங்கள், பிரதேசத்திலுள்ள பரோபகாரிகள் தொடர்ந்தும் பங்களிப்புச் செய்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குளவிக் கொட்டுக்கு இலக்கான நான்கு பெண் தொழிலாளர்கள் வைத்தியசாலையில் அனுமதி

(செ.தி.பெருமாள்)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள இரு வேறு தோட்டத்தைச் சேர்ந்த 04 பெண்கள் குளவி கொட்டுக்கு இலக்கான நிலையில் நேற்று(28) மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ்வாறு குளவி கொட்டுக்கு இலக்கான பெண்களில் மூன்று பேர் மஸ்கெலியா தோதலா தனியார் தோட்டத்தில் தேயிலை கொழுந்து பறித்துக் கொண்டிருந்த வேளையில் இலக்கானதாகவும் ஏனைய ஒருவர் ஹொரன பிளான்டேசனுக்கு உரித்தான ஒல்ட்டன் தோட்டத்தில் பணியில் ஈடுபட்டிருந்த வேளையில் குளவி கொட்டுக்கு இலக்கான நிலையில் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அரச உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(ஆர்.சுரேஷ்குமார்)

அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு நிகழ்த்தப்பட்ட இரண்டாம் மொழி தமிழ்மொழி பாடநெறியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (27) இடம்பெற்றது.

பதுளை மாவட்ட செயலகத்தில் மாவட்ட தேசிய ஒருமைப்பாட்டு மேம்பாட்டு உத்தியோகத்தர் முஷாரப் தலைமையில் பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த 154 சிங்கள மொழி மூல அரச உத்தியோகத்தர்களில் தமிழ்மொழி பாடநெறியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

தமிழ்மொழி கற்கை நெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்த அரச உத்தியோகத்தர்களிற்கு அரச கரும மொழிகள் திணைக்களத்தின் சான்றிதழ் வழங்கப்பட்டது. மேலும் இக்கற்கை நெறியானது 150 மணித்தியாலயங்கள் கொண்டதுடன் 12 நாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

உலக நுண்ணிய, சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கான தினத்தையொட்டி மக்கள் வங்கியின் விற்பனைக் கண்காட்சி

(பேருவளை திகுபர்)

உலக நுண்ணிய, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்களுக்கான தினத்தினையொட்டி மக்கள் வங்கியின் சிறிய மற்றும் மத்திய அளவிலான வணிகங்களுக்கான பிரிவு ஒழுங்கு செய்துள்ள Biz Fair 2022 விற்பனைக் கண்காட்சி அண்மையில் மக்கள் வங்கியின் தலைமை அலுவலகத்தில், மூன்றாவது மாடியில் இடம்பெற்றது.

மக்கள் வங்கியின் பீபள்ஸ் ஸ்பார்க் (People's Spark) தொழில்முனைவோர் அபிவிருத்தி நிகழ்ச்சியின் உறுப்புரிமை வகிக்கும் வர்த்தகர்கள் மற்றும் ஏனைய வணிக வாடிக்கையாளர்களின் பங்கேற்புடன் இடம்பெற்ற இந்த கண்காட்சி மகளிர் மற்றும் ஆடவர் ஆடைகள், உணவு வகைகள், பால் உற்பத்திகள் மற்றும் சீஸ் வகைகள், வாசனைப் பொருட்கள் மற்றும் அவை சார்ந்த உற்பத்திகள், காபன் பசளை, மின்சார உபகரணங்கள், ஆபரணங்கள் மற்றும் ஏனைய பொருட்கள் அடங்கிய ஸ்டாக்கிக்கடைகள் பலவற்றைக் கொண்டிருந்தது. மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி பொது முகாமையாளர் ரஞ்சித் கொடுவக்கு ஆகியோரின் தலைமையில், ஆரம்பிக்கப்பட்ட இந்த விற்பனைக் கண்காட்சிக்கு மக்கள் வங்கியின் சிரேஷ்ட பிரதி பொதுமுகாமையாளர் (கொடுப்பனவுகள் மற்றும் டிஜிட்டல்) கே.பீ.ராஜபக்ஷ, சிரேஷ்ட பிரதி பொதுமுகாமையாளர் (வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல் சேவைகள்) ரொஹான் பதிரகே ஆகியோருடன் பிரதி பொதுமுகாமையாளர் (தொழில்முனைவோர் வங்கி நடவடிக்கைகள்) கிரிஷானி நாரங்கொட, உதவி பொது முகாமையாளர் (சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்கள்) விக்கிரம நாராயண உள்ளடங்கலாக நிறுவன மற்றும் பிரதம முகாமையாளர் குழு மற்றும் ஊழியர்கள் குழுவும் கலந்துகொண்டனர்.

செலான் வங்கி - பீ.எல்.சீ.

(2007 – 07.ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் பிரகாரம் குறிப்பு P.Q.9இன் கீழ் பதிவு செய்யப்பட்டது)

1990ஆம் ஆண்டு 04ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 04ஆம் பிரிவின் கீழ் ஸெலன் வங்கி பீ.எல்.சீ இன் பணிப்பாளர் ஸபையினால் எடுக்கப்பட்ட தீர்மானம் இதனால் அறிவிக்கப்படுவதாவது, 1990ஆம் ஆண்டு 04ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 04ஆம் பிரிவின் கீழ் 2022/04/27ஆம் திகதி நடைபெற்ற சட்டத்தில் ஸெலன் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 04ஆம் பிரிவின் கீழ் 2022/04/27ஆம் திகதி நடைபெற்ற சட்டத்தில் ஸெலன் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளதாவது:

கிளை : பொத்துஹெர

கணக்கு இலக்கம் : 1510-33348736-001

(2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் பிரகாரம் கம்பனி பதிவு இலக்கம்: P.Q.9இன் கீழ் பதிவு செய்யப்பட்ட) ஸெலன் வங்கி பீ.எல்.சீ இன் சார்பில் பிரசித்த நொத்தாரிசு எம்.கே.பேரின்பராஜா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2013 மார்ச் 13ஆம் திகதியிடப்பட்ட 1742ஆம் இலக்க பிணையுறுதி, 2013 செப்டெம்பர் 18ஆம் திகதியிடப்பட்ட 2051ஆம் இலக்க பிணையுறுதி, 2015 ஜூன் 26ஆம் திகதியிடப்பட்ட 2865ஆம் இலக்க பிணையுறுதி, 2015 செப்டெம்பர் 15ஆம் திகதியிடப்பட்ட 2914ஆம் இலக்க பிணையுறுதி மற்றும் 2016 ஜூன் 28ஆம் திகதியிடப்பட்ட 3115ஆம் இலக்க பிணையுறுதி ஆகிய பிணையுறுதிகளின் கீழ் செலுத்தப்படாமல் நிலுவையாக நிற்கும் தொகையை "கடன் பெற்றவரான / அடகுவைத்தவரான" பொத்துவில்-11ஐச் சேர்ந்த தீபாம் நிரோஷ் சதாவந்த மறுபெயர் தீபாம் நிரோஸ் சத்தாவந்த என்பவரால் செலுத்தத் தவறியுள்ளமையால் குறித்த பிணையுறுதிகளின் மீது பெறப்பட்ட தவணைக் கடன்-1 வகுக்கான 2021 செப்டெம்பர் 27ஆம் திகதி வரை அசல் மற்றும் வட்டித்தொகையாக ஆறு மில்லியன் தொள்ளாயிரத்து முப்பத்தாறாயிரத்து முன்னூறு ரூபா என்பதிலொரு சதத் (ரூ.6,936,360.81) தொகை மற்றும் 2021 செப்டெம்பர் 28ஆம் திகதி தொடக்கம் ஆறு மில்லியன் இருநூறு நாற்பத்தாறாயிரத்து முன்னூறு எழுபது ரூபா எழுபத்தேழு சதத் (ரூ.6,246,370.77) தொகை மீது பதினான்கு வீத (14%) வருடாந்த வட்டியுடன் சேர்த்து ஸெலன் வங்கி பீ.எல்.சீ க்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகையை நிர்ணயக் காரணமாக மேற்படி தொகையான ஆறு மில்லியன் தொள்ளாயிரத்து முப்பத்தாறாயிரத்து முன்னூறு என்பது ரூபா என்பதிலொரு சதத் (ரூ.6,936,360.81) தொகையை முற்றாக அறவிடும் வரை அத்தொகை மீது 2021 செப்டெம்பர் 28ஆம் திகதி தொடக்கம் முழுமையாக அறவிடும் காலப்பகுதி வரை மேல் குறிப்பிடப்பட்ட வட்டி வீதத்தில் வட்டித் தொள்கையையும், விளம்பர செலவுகளையும், மற்றும் மேற்படி சட்டத்தின் 13ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் ஏனைய கட்டணங்களையும் சேர்த்து அறவிடுவதுகாலம் அதன் பின்னர் கொடுப்பனவுகள் (எலவுப்) பெறப்பட்டிருப்பின் அவற்றை கழித்து அறவிடுவதற்காக ஸெலன் வங்கி பீ.எல்.சீ யிடம் மேற்படி 1742, 2051, 2865, 2914 மற்றும் 3115ஆம் இலக்க அடகுறுதிகளின் கீழ் அடகு வைக்கப்பட்டதும் இதன் கீழ் அட்டவணையில் விளக்கப்பட்ட ஆதனம் மற்றும் அதன் வளாகம் உத்தரவு பெற்ற ஏஜரார் திருமதி சந்திமா கமகே என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென ஸெலன் வங்கி பீ.எல்.சீ இன் பணிப்பாளர் சபை 1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) கீழ் அதற்கிசைந்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதனால் தீர்மானித்திருக்கின்றது.

மேற்குறிப்பிடப்பட்ட ஆதன அட்டவணை :

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம் பொத்துவில் பாணமப்தது பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவில் பீ/03 கிராம சேவகர் பிரிவிற்குள், பொத்துவில்-03இல் அமைந்துள்ள "பாக்கியாவத்தை அல்லது மௌலானா தோட்டம்" என அழைக்கப்படும் பாரிய காணியின் பகுதியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான சீ.ச.பிலிப்ஸ் என்பவரால், 1952.09.15ஆம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 805ஆம் இலக்க நில வரைபடத்தில் வடக்கில் ஏறத்தாழ நூற்றுநான்கு அடி மற்றும் கிழக்கிலிருந்து மேற்காக ஐம்பத்திரண்டு அடி (N-S-104. ft, E-W-52ft) எனும் அளவில் பிரித்தெடுத்துக்கப்பட்ட காணித்துண்டு மற்றும் அதில் அமைந்துள்ள மாவும் ஆகும். அதன் எல்லைகளாவன: வடக்கு: பாக்கு கிழக்கு: கே. மஜ்ரு றோனை என்பவருக்குச் சொந்தமான காணி தெற்கு: கே. அலவத்தம்பி என்பவருக்குச் சொந்தமான காணி மேற்கு: எம்.எம். பிஜுதீன் என்பவருக்கு சொந்தமான காணி ஆகிய எல்லைகளைக் கொண்டுள்ள காணித்துண்டாகும்.

உத்தரவு பெற்ற நில அளவையாளரான எஸ்.எம். சாகிம் என்பவரால், 2011.07.01ஆம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 5630ஆம் இலக்க நில வரைபடத்தின் பிரகாரம்:

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம் பொத்துவில் பாணமப்தது பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவில் பீ/03 கிராம சேவகர் பிரிவிற்குள், பொத்துவில்-03இல் அமைந்துள்ள "பாக்கியாவத்தை அல்லது மௌலானா தோட்டம்" என அழைக்கப்படும் காணித் துண்டு ஆகும். அதன் எல்லைகளாவன: வடக்கு: பாக்கு கிழக்கு: கே. மஜ்ரு றோனை என்பவருக்குச் சொந்தமான உரிமை கோரப்படும் காணி தெற்கு: கே. அலவரத்தினம் என்பவரால் உரிமை கோரப்படும் காணி மேற்கு:எம்.எம். பியதாசு மற்றும் ஏனையவர்களால் உரிமை கோரப்படும் காணி ஆகிய எல்லைகளைக் கொண்டுள்ள காணித்துண்டின் பரப்பளவானது இருபத்து மூன்று புள்ளி ஒன்று ஒன்று பேர்ச் (ஏ:00-று.00-பே.23.11) (0.0585 ஹெக்டேயர்) ஆகும்.

பணிப்பாளர் சபையின் சட்டவாப்படி
(திருமதி) வீ.ஏ. பரணகல
சட்டத்தரணி, உதவி பொது முகாமையாளர் – சட்டம்

பதுளை பிரபல பாடசாலையின் உயர்தர மாணவர்கள்

பிரத்தியேக வகுப்புக்கு செல்வதாகக் கூறி போதைப்பொருள் தேடிச்செல்லும் நிலைமை

மெதிரிய வனப்பகுதியிலிருந்து 15 பேர் மீட்பு

பதுளை நகரில் பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்லும் சில மாணவர்கள், போதைப் பொருட்களைத் தேடிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளதாக பதுளை தொகுதிக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி சுஜித் வெதமுல்ல தெரிவித்துள்ளார். எனவே, பெற்றோர் தமது பிள்ளைகள் குறித்து அவதானத்துடன் இருக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

கடந்த சனிக்கிழமை போதைப்பொருள் பயன்படுத்திய உயர்தர மாணவர்கள் 15 பேர் வரை மெதிரிய வனப்பகுதியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், இவர்கள் பதுளை மற்றும் ஹாலிஎல பிரதேசங்களிலுள்ள பிரபல பாடசாலைகளைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பிபிலை மற்றும் தெஹியத்தகண்டிய பிரதேசங்களைச் சேர்ந்த இவர்களில் சிலர் விடுதிகளில் தங்கி படிக்கும் மாணவர்கள் எனவும் குறித்த மாணவர்கள் போதைப்பொருட்களைப் பயன்படுத்த ஆரம்பித்த தினமே பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், இவர்களுக்கு எவ்வாறு போதைப்பொருள் கிடைத்தது என்பது தொடர்பிலும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

பொலிஸாரின் பொறுப்பிலிருந்த மாணவர்கள் கடுமையான எச்சரிக்கையின் பின்னர் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

மனைவியை கோடரியால் தாக்கி கொலை செய்த விவகாரம்: கணவருக்கு ஜூலை 11ஆம் திகதிவரை விளக்கமறியல்

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒலிபன்ட் மேற்பிரிவு தோட்டத்தில் தனது மனைவியை கோடரியால் தாக்கி படுகொலை செய்த கணவரை ஜூலை மாதம் 11ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நுவரெலியா மாவட்ட நீதவான் தினேன எம்.பீரிஸ் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 25ஆம் திகதி இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் 26 வயதான சுப்பிரமணியம் சத்தியவாணி என்பவரே கோடரியால் தாக்கி படுகொலை செய்யப்பட்டவராவார்.

தனது பிள்ளைகளுடன் சரணடைந்த இவரை நுவரெலியா பொலிஸார் நேற்றுமுன்தினம் நுவரெலியா நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியிருந்தனர்.

மேலும் பிள்ளைகள் இருவரையும் அரச குழந்தைகள் காப்பகத்திற்கு அனுப்பி வைக்க நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்கப்பட்ட நிலையில், உயிரிழந்த பெண்ணின் தாயாரின் பராமரிப்பில் பிள்ளைகளை பராமரிக்க நீதவான் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தோட்டங்களிலுள்ள கூட்டுறவுக் கடைகள் ஊடாக உணவுப்பொருள் விநியோகம் இடம்பெற வேண்டும்

நோர்வூட் பிரதேச சபைத் தலைவர் கைத்தொழில் அமைச்சருக்கு கடிதம் மூலம் கோரிக்கை

(மஸ்கெலியா நிருபர்)

தோட்டங்களிலுள்ள கூட்டுறவுக் கடைகள் ஊடாக தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாய விலையில் உணவுப்பொருட்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென நோர்வூட் பிரதேச சபைத் தலைவர் கே.குழந்தைவேல் ரவி, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சருக்கும், தோட்ட நிர்வாகங்களுக்கும் கடிதங்களை அனுப்பிவைத்துள்ளார்.

தோட்டங்கள்தோறும் ஒரு காலத்தில் கூட்டுறவு கடைகள் இயங்கிவந்தன. அவற்றுக்கு தோட்ட முகாமையாளர்களே பொறுப்பாக இருந்தும் வந்துள்ளார்கள். ஆனால், இடைப்பட்ட காலத்தில் ஒருசில தோட்டங்களைத் தவிர, ஏனைய தோட்டங்களில் கூட்டுறவுக் கடைகள் முறையாக இயங்குவதில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை.

அதேநேரம், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் கட்டிட நிர்மாணப் பணிகள் முதலான விடயங்கள் மாத்திரம் கூட்டுறவுக் கடைகள் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால், மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப்பொருட்களை பெற்றுக் கொடுப்பதில் ஆர்வம் காட்டப்படுவதில்லை என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

எனவே, தோட்டங்கள்தோறும் கூட்டுறவுக் கடைகள் ஆரம்பிக்கப்பட்டு முறையாக நிர்வகிக்கப்படும் பட்சத்தில் இன்றைய பொருளாதார நெருக்கடி மற்றும் விலைவாசி அதிகரித்துள்ள காலகட்டத்தில் தோட்டத் தொழிலாளர்கள் குறைந்த விலையில் உருணவு முதலான அத்தியாவசியப் பொருட்களை தோட்டங்களிலேயே சிரமமின்றி பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

மேலும், தோட்டத் தொழிலாளர்கள் தமது தேவைகளுக்கும் அத்தியாவசிய உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கும் பல கிலோ மீற்றர் பயணத்தை மேற்கொண்டு நகர்ப்புறங்களுக்கு சென்று வரவேண்டியுள்ளது. இன்றைய சூழ்நிலையில் போக்குவரத்துப் பிரச்சினை, போக்குவரத்துக் கட்டணம் உட்பட பல்வேறு அசௌகரியங்களுக்கு அவர்கள் முகங்கொடுக்கவேண்டிய நிலையிலும் உள்ளார்கள்.

இதை உணர்ந்து தோட்டங்களிலேயே அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள சகல தோட்டங்களிலும் கூட்டுறவுக் கடைகள் இயங்குவதற்கு தோட்ட நிர்வாகங்கள் அக்கறை செலுத்த வேண்டியது அவசியமாகும். தோட்டத் தொழிலாளர்களை கூட்டுறவுக் கடைகளில் அங்கத்தவர்களாக சேர்த்துக்கொள்ள வேண்டும்.

அத்தோடு, தோட்டங்களில் காணப்படும் தரிசு நிலங்களை கூட்டுறவுக் கடைகளில் அங்கத்தவர்களாக உள்ளவர்களுக்கு பகிர்ந்தளித்து விவசாய உற்பத்தியை ஊக்குவிக்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக நோர்வூட் பிரதேச சபைக்கு உட்பட்ட 105 பிரிவுகளைக்கொண்ட 32 தோட்டங்களைச் சேர்ந்த முகாமையாளர்களுக்கும் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதோடு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டுள்ளது - என்றார்.

அத்தியாவசிய சேவையாளர்களுக்கு ஹட்டனில் டீசல் விநியோகம்

ஏனையோருக்கும் மட்டுப்படுத்தப்பட்டளவில்

ஹட்டன் நகரிலுள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு நேற்றுமுன்தினம் (27) 6,600 லீற்றர் எரிபொருள் கிடைக்கப்பெற்றதுடன், இராணுவத்தினரின் கண்காணிப்பின்கீழ், குறித்த டீசல் தொகை அத்தியாவசிய சேவையாளர்களுக்கு மாத்திரம் விநியோகிக்கப்பட்டது.

இதன்போது அத்தியாவசிய சேவையற்ற வாகனங்களுக்கும் மட்டுப்படுத்தலுடன், நேற்று டீசல் விநியோகிக்கப்பட்டது. முன்னதாக இராணுவத்தினரால் வழங்கப்பட்ட டோக்கன்களுக்கமையவே டீசல் வழங்கப்பட்டதுடன், சாதாரண வாகனங்களுக்கு மட்டுப்படுத்தலுடனும் அத்தியாவசிய வாகனங்களுக்கு மட்டுப்படுத்தலுடனிருந்தும் டீசல் விநியோகிக்கப்பட்டது.

இதன்போது இராணுவத்தினருக்கு ஹட்டன் பொலிஸாரும் ஒத்துழைப்பு வழங்கியிருந்த அதேவேளை, ஹட்டன் டிப்போ மூலம் சுறுகிய தூர சேவைகளுக்கான பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பதுளை – ரொக்ஹில் அருள்மிகு ஸ்ரீ முருகப்பெருமான் தேவஸ்தான உற்சவ நிறைவு தின நிகழ்வுகள் நேற்று (28) நடைபெற்றன. இதன்போது இடம்பெற்ற நிகழ்வுகளை காணலாம். (பதுளை நிருபர்)

நுவரெலியாவிலுள்ள தூரப் பிரதேசத்துக்கும் சமையல் எரிவாயு விநியோகிக்க வேண்டும்

எரிவாயு விநியோக முகவர்களிடம் இராதா எம்.பி. கோரிக்கை

(க.கிஷாந்தன்)

நுவரெலியா மாவட்டத்தில் தூர பகுதிகளுக்கும் முறையாக சமையல் எரிவாயுவை விநியோகிக்குமாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.இராதாகிருஷ்ணன் கோரிக்கை விடுத்தார்.

கொட்டகலை நகர பகுதிக்கு நேற்று பயணம் மேற்கொண்டிருந்த இவர், அங்குள்ள லாவ்ஸ் கேஸ் முகவருடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டிருந்தார்.

சமையல் எரிவாயுவை முறையாக விநியோகிப்பதிலுள்ள நெருக்கடி நிலை குறித்து கேட்டறிந்த அவர், மக்கள் தரப்பில் முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் குறித்தும் கட்டிக்காட்டினார்.

நகர்ப் பகுதிகளுக்கு நெருக்கடிக்கு மத்தியில் எரிவாயு விநியோகிக்கப்பட்டாலும், தூர இடங்களிலுள்ள தோட்டப் பகுதிகளுக்கு சென்றடைவதில்லை. எனவே, இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

இதன்போது மலையக தொழிலாளர் முன்னணியின் நிதிச் செயலாளர் புஷ்பா வில்வராஜன் மற்றும் உறுப்பினர்களும், அதிகாரிகளும் உடனிருந்தனர்.

கொட்டகலை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத் திற்குட்பட்ட கிறேட்வெஸ்டன் பாடசாலையைச் சேர்ந்த 400 மாணவ, மாணவிகளுக்கு இரண்டாம் கட்ட பூஸ்டர் தடுப்பூசி நேற்று (28) செலுத்தப்பட்டது. (தலவாக்கலை நிருபர்)

பசறையில் 100 லீற்றர் டீசலுடன் ஒருவர் கைது

(பதுளை நிருபர்)

பசறைப் பகுதியில் எரிபொருளை பதுக்கி வைத்திருந்த நபரொருவர் நேற்று (28) பசறை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். மூன்று கொள்கலன்களில் 100 லீற்றர் டீசல் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் பதுளை, டெமேரியா பெருந்தோட்டப் பிரிவைச் சேர்ந்த வராவார். பசறை பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலொன்றினைபெற்றுத், குறிப்பிட்ட பெருந்தோட்டப் பிரிவிற்கு விரைந்த பொலிஸார், அத்தோட்டப் பிரிவை சுற்றிவளைத்து, தேடுதல்களை மேற்கொண்டபோதே, பதுக்கிவைக்கப்பட்ட எரிபொருள் மீட்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட நபர், பதுளை மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தனியார் பஸ்கள் சேவையில் இல்லை

(செ.தி.பெருமாள்)

மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் நேற்றுக் காலைமுதல் தனியார் பஸ்கள் சேவையில் இல்லை. இதனால் மக்கள் பெரிதும் அவதியுறுவதை அவதானிக்க முடிந்தது. மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் மாதாந்தம் நடைபெறும் கிளினிக்கு செல்பவர்கள் இதனால் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளதாக தெரிவித்தனர்.

முச்சக்கரவண்டிகள், ஏனைய வாகனங்கள் மற்றும் தனியார் பஸ்கள் இயங்க டீசல், பெற்றோல் இல்லை. அரச பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டபோதும் நெடுந்தூரம் செல்லும் பஸ்களான கதிர்காமம், கொழும்பு, காட்மோர் ஆகிய மூன்று அரச பஸ்கள் மட்டும் காலை வேளையில் சேவைகளில் ஈடுபட்டன.

ஹட்டன் அரச அதிகாரியிடம் இது குறித்து கேட்டபோது, ஹட்டன் அரச பஸ் நிலையத்தில் சுமார் 20 பஸ்கள் ரயர்கள் இல்லாமல் சேவையில் ஈடுபடுத்த முடியாத நிலையில் உள்ளதாகவும் இதனால் ஹட்டன் அரச பஸ் நிலையத்துக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட அமைச்சு முன்வந்து பற்றாக்குறையாக உள்ள ரயர்களை பெற்றுத் தருமாறும் கேட்டுக்கொண்டார்.

எது எப்படியாயினும், எரிபொருள் மற்றும் ரயர்கள் இல்லாமல் மக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் நேற்று காலை முதல் தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடவில்லை.

மஸ்கெலியா சென். ஜோசப் தேவாலயத்தின் புனித அந்தோனியார் திருவிழாவை முன்னிட்டு கடந்த 24ஆம் திகதி கொடியேற்றப்பட்டது. ஆலய பங்குத்தந்தை தலைமையில் ஆரம்பமாகிய திருவிழாவில் தொடர்ந்து மூன்று நாட்கள் பூஜைகள் நடைபெற்று நேற்று முன்தினம் (27) புனித அந்தோனியார் திருச்சொரூபம் வலம் வந்தது. ஆராதனை நிகழ்வுகளில் பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டிருந்தனர். (செ.தி.பெருமாள்)

வடக்கில் கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்கு ஜப்பான் அரசு 244 மில்லியன் நிதியுதவி

(கிளிநொச்சி நிருபர்)

வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கண்ணிவெடி அகற்றும் பணிகளை தொடர்ந்தும் முன்னெடுக்க ஜப்பான் அரசு சுமார் 244 மில்லியன் ரூபா நிதி உதவியை வழங்கியுள்ளது.

ஜப்பான் அரசின் இற்றன்கொடை மூலம் டாஸ் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கண்ணிவெடி அகற்றும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கையின் வட பிராந்தியத்தில் மனிதேய கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்காக ஜப்பானிய அரசாங்கம் தனது Grant Assistance for Grassroots Human Security Projects (GGP) திட்டத்தினூடாக 6,81,812 அமெரிக்க டொலர்கள் (சுமார் 244 மில்லியன் ரூபா) நன்கொடையை DASH அமைப்புக்கு வழங்கியுள்ளது.

நேற்று(28) காலை கிளிநொச்சிமாவட்டத்தின் முகமாலை பகுதியில் அமைந்துள்ள DASH செயற்பாட்டு பகுதியில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி ஹிதேகி மற்றும் DASH இன் நிகழ்ச்சி முகாமையாளர் ஆனந்த சந்திரசிறி ஆகியோர் கலந்துகொண்டு இந்த நன்கொடை வழங்கலுக்கான உடன்படிக்கையை கைச்சாத்திட்டனர்.

இதன்போது DASH இன் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் ஆனந்த சந்திரசிறி கருத்து தெரிவிக்கையில்,

2010ஆம் ஆண்டுமுதல் இதுவரையில் DASH இனால் 15 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டிருந்தன. இதில் ஜப்பானிய அரசின் GGP உதவித் திட்டத்தினூடாக 6.5 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு விடுவிக்கப்பட்டன.

DASH க்கு ஜப்பான் வழங்கும் இந்த உதவியானது, இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியான சூழலில் 135 கண்ணிவெடி அகற்றும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாத்துள்ளது. அதற்காக ஜப்பான் அரசுக்கும் அந்நாட்டு மக்களுக்கும் நன்றி கூறுகின்றேன்.

இவ்வருடத்துடன், ஜப்பானுக்கும் இலங்கைக்கு மிடையே இராஜதந்திர உறவுகள் ஆரம்பமாகி 70 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளன. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதியில் அபிவிருத்தி தொர்பில் இலங்கைக்கான ஜப்பானிய உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவித் திட்டத்தில் முக்கிய அங்கம் பெறுகின்றது. இலங்கை அரசாங்கத்தின் "கண்ணிவெடி பாதிப்பற்ற இலங்கை" என்பதை எய்துவதற்கு ஜப்பானிய அரசாங்கம் தொடர்ந்தும் பங்கு எப்ப! வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றது – என்றார்.

வருமானத்தை இழந்த குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கிவைப்பு

(சாவகச்சேரி நிருபர்)

தென்மராட்சிப் பிரதேசத்தில் நாட்டு நிலவரை காரணமாக வருமானத்தை இழந்த 50 குடும்பங்களுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

லண்டனைச் சேர்ந்த புலம்பெயர் உறவினர் ஒருவரின் நிதிப்பங்களிப்பில் கச்சாய், மகிழங்கேணி, உதயசூரியன், உப்புக்கேணி, கல்வயல் மற்றும் நுணாவில் பகுதிகளைச் சேர்ந்த தேவைப்பாடுடைய குடும்பங்களுக்கே இவ்வாறு தலா 2ஆயிரத்து 500ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

உலருணவுப் பொதிகளை சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்களான ம.நடனதேவன் மற்றும் வீ.விஜயேந்திரன் ஆகியோர் பயனாளிகளிடம் கையளித்திருந்தனர்.

எரிபொருள் விநியோகம் தொடர்பாக கலந்துரையாடல்

(யாழ். நிருபர்)

யாழ். மாவட்ட எரிபொருள் விநியோகம் தொடர்பாக இராணுவ அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலாளர்களுடனான விசேட கலந்துரையாடல் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

நாடு முழுவதும் எரிபொருள் விநியோக ஒழுங்படுத்தும் பணிகளில் முப்படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ள நிலையில், யாழ். மாவட்டத்தில் பிரதேச செயலகங்களுடன் இணைந்து இராணுவத்தினர் இப்பணிகளை முன்னெடுக்கவுள்ளனர்.

மாவட்டத்தில் அறிமுகமாகியுள்ள எரிபொருள் பங்கீட்டு அட்டை நடைமுறையை மேற்பார்வை செய்யும் பணியை இராணுவத்தினர் முன்னெடுக்கவுள்ளனர்.

இதன்படி மக்கள் பங்கீட்டு அட்டையில் தாம் தெரிவுசெய்யும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மட்டுமே எரிபொருளை பெறமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன், மேலதிக அரசாங்க அதிபர் ம. பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) முரளிதரன், பிரதேச செயலாளர்கள், இராணுவ, கடற்படை அதிகாரிகள், பொலிஸ் பொறுப்பதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வடக்கு செய்திகள்

thamilannorth@gmail.com

சாவகச்சேரியிலுள்ள பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் (27) காலை தொடக்கம் எரிபொருட்களுக்கு முற்பதிவினை மேற்கொள்ள பெருந்திரளானவர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

அவ்வாறு வரிசையில் நின்றவர்களுக்கு இராணுவத்தினரால் டோக்கன் வழங்கப்பட்டது. (சாவகச்சேரி நிருபர்)

ஊடக செயற்பாட்டாளர் வின்சனின் முதலாம் ஆண்டு நினைவேந்தல்

(யாழ். நிருபர்)

ஊடக செயற்பாட்டாளரும், மொழிபெயர்ப்பாளரும் இலக்கியவாதியுமான அமரர் விச்சன் புனோறஸ்ஸ் ஜோசப் பின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

குருநகர் புதுமை மாதா கோவில் கிழக்கு வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் (27) இந்த நினைவேந்தல் இடம்பெற்றது.

நினைவேந்தலின்போது அவரது உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

நினைவேந்தலில் நினைவுப்பேருரையை அரசியல் ஆய்வாளர் ம.நிலாந்தன் "தமிழ் ஊடகப்பரப்பில் மொழி பெயர்ப்பியல் கலை" எனும் பெயரில் முன்னெடுக்கப்பட்டது.

யாழில் சிறுமி கடத்தல் விவகாரம்; இருவர் கைது

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணத்தில் சிறுமி ஒருவர் கடத்தப்பட்டதாக உறவினர்களால் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் யாழ்.நகரை அண்மித்த பகுதியை சேர்ந்த இரு இளைஞர்களை கைதுசெய்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

யாழ். நகரை அண்மித்த பகுதியைச் சேர்ந்த சிறுமி ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.நகர் பகுதியில் வைத்து கடத்தப்பட்டதாக உறவினர்களால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது.

இந்நிலையில், நேற்று முன்தினம் திங்கட்கிழமை குறித்த சிறுமி, கிளிநொச்சி பகுதியில் வைத்து கிளிநொச்சி பொலிஸாரினால் மீட்கப்பட்டு, கிளிநொச்சி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, தமது முறைப்பாடு தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் உரிய விசாரணைகளை முன்னெடுக்கவில்லை எனவும், தமது பகுதிக்கு அன்மையில் வசிக்கும் இளைஞர் குழு ஒன்றினால் தமக்கு தொடர் அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுவதாகவும் அது தொடர்பிலும் பொலிஸாருக்கு அறிவித்தும் எந்த நடவடிக்கையும் பொலிஸார் எடுக்கவில்லை எனவும் சிறுமியின் உறவினர்கள் வடமாகாண ஆளுநர் அலுவலகத்திலும் முறையிட்டிருந்தனர்.

அதனையடுத்து, துரித விசாரணைகளை முன்னெடுத்துள்ள யாழ்ப்பாண பொலிஸார், சிறுமியின் உறவினர்களின் வாக்குமூலத்தின் அடிப்படையில் சந்தேகத்தின்பேரில் இரு இளைஞர்களை கைதுசெய்து யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

6 வயது சிறுமியை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியவருக்கு விளக்கமறியல்

(யாழ். நிருபர்)

யாழில் 6 வயது சிறுமியை பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட குடும்பத் தலைவனை விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரான்பற்று பகுதியில் இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

சம்பவத்தையடுத்து, சிறுமிக்கு ஏற்பட்ட மன உளைச்சலையடுத்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டது.

சிறுமி வழங்கிய தகவலின் அடிப்படையில் அவரது தந்தையின் நண்பரான அயல் வீட்டை சேர்ந்த குடும்பத்தலைவர் ஒருவர் இளவாலை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேக நபர் நேற்று முன்தினம் (27) திங்கட்கிழமை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அதனையடுத்து, சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

திகதி 27.06.2022 தேசிய நிறுவனம் தேசிய லொத்தர் சபை www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4799
இரண்டாம் பரிசு ரூ. 8,023,660.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,015,017.00
ஆரம்பிக்கும் G வெற்றி இலக்கங்கள் 8 7 8 9 7 4

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1277
ரூ. 2,512,000.00
வெற்றி இலக்கங்கள் 4 5 4 0 5 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,028,948.80

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3041
ரூ. 4,909,400.00
ஆரம்பிக்கும் B வெற்றி இலக்கங்கள் 44 46 48 57
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,101,401.20

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 829
ரூ. 2,056,100.00
S 11 35 51 60 வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 116,346,187.60

ராசி சுப மலன
சீட்டிழுப்பு இலக்கம் : 108
ரூ. 5,073,360.00
இலக்கம் விருச்சிகம் வெற்றி இலக்கங்கள் 06 29 34 47 விசேட இலக்கம் விருச்சிகம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,717,115.20

25+ Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1147
ரூ. 2,690,020.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 258,887,982.00
M 12 06 42 54 58
அடுத்த நபர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த விரிவாட்ட சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011-4607001-2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4607475 Web : www.nlb.lk

வசதிகளை ஏற்படுத்தித் தந்தால் வாகனேரியில் சுமார் 1500 ஏக்கர் மீள் இடைப்போகம் செய்யமுடியும்

அகில இலங்கை விவசாய சம்மேளன மாவட்டத் தலைவர் யோகவேள்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு வாகனேரி விவசாயக் கண்டத்தில் தற்போது மீள் இடைப்போக நெற்செய்கையை மேற்கொள்ளக்கூடியதாக உள்ளது. தற்போதைய உணவு நெருக்கடியைத் தீர்க்க இது இயற்கையின் கொடையாக அமையும். இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்வதற்கு அரசு எமக்கு உர விநியோகத்தை சீராகச் செய்யவேண்டும் - என அகில இலங்கை விவசாய சம்மேளனத்தின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் எஸ்.யோகவேள் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது.

வாகனேரி விவசாயக் கண்டத்தில் சுமார் 1,500 ஏக்கர் தொடக்கம் 2,000 ஏக்கர் வரையான மீள் இடைப்போக நெற்செய்கையை மேற்கொள்ள முடியும். ஆனால், அதற்கு உரம் தேவை. அவ்வாறு உரத்தை அரசு வழங்குமாக இருந்தால் பிரதேச விவசாயிகள் நம்பிக்கையுடன் மீள் இடைப்போகத்தைச் செய்யமுடியும்.

இந்த இடைப்போகம் ஜூலை மாதம் நடுப்பகுதியில் ஆரம்பித்து ஒக்டோபர் மாதத்திற்குள் அறுவடை செய்ய முடியும். இது நாட்டில் ஏற்பட்டபோதெனை எதிர்வுகூறப்படும் உணவுப் பஞ்சத்தைப் போக்க வழிகோலும்.

எனவே, இந்த விடயத்தில் துறைசார்ந்த அதிகாரிகள் முழு ஒத்துழைப்பையும் வழங்கி பிரதேச விவசாயிகளுக்கு உதவ முன்வரவேண்டும். இது விடயமாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கும் அறிவித்துள்ளோம் - என்றார்.

திருகோணமலையில் வாகனங்களிலிருந்து நூதனமான முறையில் பெற்றோல் திருட்டு

(அப்துல்சலாம் யாசிம்)

திருகோணமலை விநாயகபுரம் பகுதியில் கும்பலொன்று வீட்டுக்கு வெளியே நிறுத்தி வைத்திருந்த மோட்டார்சைக்கிளில் பெற்றோலை திருடும் காட்சி அங்கிருந்த சிசிரிவி பாதுகாப்பு கெமராவில் பதிவாகியுள்ளது.

நான்கு பேரைக்கொண்ட குழுவொன்றில் மூன்றுபேர் வீதிகளில் காவல் பணிகளில் ஈடுபட ஒருநபர் மோட்டார்சைக்கிளிலிருந்து பெற்றோலை திருடுகின்ற சம்பவம் கடந்த ஞாயிறுகிழமை விநாயகபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவுகின்ற இன்றைய சூழலில் பலர் எரிபொருளை பதுக்கும் நடவடிக்கைகளிலும் அதிகமான விலைக்கு விற்பனை செய்கின்ற நடவடிக்கைகளிலும் தரித்துநிற்கின்ற வாகனங்களில் எரிபொருளை திருடுகின்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றார்கள்.

குறிப்பாக, போதைப்பொருள் பழக்கத்திற்கு அடிமையாகியுள்ள இளைஞர்கள் இதுபோன்ற திருட்டுச் சம்பவத்தில் அதிகம் ஈடுபட்டு வருவதாக தெரிய வருகின்றது.

எனவே மக்களை மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும் கோரிக்கை விடுக்கின்றனர்.

வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கைகளுக்கான மரக்கன்றுகள் மட்டக்களப்பில் வழங்கிவைப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

அரச உத்தியோகத்தர்களுக்கான வீட்டுத் தோட்டப் பயிர்செய்கைக்கான மரக்கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அரச திணைக்கள உத்தியோகத்தர்களிடையே வீட்டுத்தோட்டப் பயிர்செய்கையை ஊக்கு விக்குமுகமாக நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டத்தை ஊக்குவிக்கும் வகையில் உத்தி யோகத்தர்களுக்கான வீட்டுத்தோட்டப் பயிர்செ ய்கைக்கான மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வீட்டுத்தோட்டப் பயிர்செய்கைக்காக 30 ஆயிரம் மஞ்சள் மரக்கன்றுகளும் 5 ஆயிரம் இஞ்சி மரக்கன்றுகளும் வழங்கப்படவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ள 30 ஆயிரம் மஞ்சள் மரக்கன்றுகளில் 2,500 மஞ்சள் மரக்கன்றுகள் மட்டக்களப்பு மாவட்ட செயகை அலுவலக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட செயகை உத்தியோகத்தர் களுக்கான மரக்கன்றுகள் மாவட்ட செயகை விவசாய விரிவாக்கல் பிரிவு உத்தியோகத்தர் நார்த்தனா குகதாசன் தலைமையில் நேற்று வழங்கப்பட்டன.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் வீட்டுத்தோட்டப் பயிர்செய்கையினை ஊக்குவிக்கும் திட்டமாக அரச திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான ஊக்குவிப்பு திட்டங்கள் ஏற்றுமதி விவசாய திணைக்களத்தினாம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிண்ணியா பாலத்திற்கு சூரிய ஒளியிலான மின் விளக்குகள்

(கிண்ணியா நிருபர்)

நீண்டகாலமாக மின் விளக்கின்றி இருளில் காணப்பட்ட கிண்ணியா கடல் மேம்பாலத்திற்கான சூரிய ஒளியிலான மின் விளக்குகள் அல்-ஹிக்மா நிறுவனத்தின் அனுசரணையுடன் உத்தியோகபூர்வமாக நேற்று முன்தினம் (27) ஆரம்பித்து வைக்கப்பட்டது. கிண்ணியா நகர சபையின் தவிசாளர் எம்.எம்.நிவாஸ் தலைமையில் குறித்த மின் விளக்குகள் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் நகர சபை உறுப்பினர்கள், கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.ஹனி, நகர சபையின் செயலாளர் விஷ்ணு மற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் அல்-ஹிக்மா பொண்டேசன் நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்வெய்க் இபாதுல்லா, சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.

பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கிவைப்பு

(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை மாவட்டம் பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மனையாவெளி பகுதியில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

திருகோணமலை புளூ வோட்டர் கழகத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் ஆ.ஜெயசீலன் தலைமையில் குறித்த உலர் உணவுப் பொருட்கள் நேற்று (28) வழங்கப்பட்டன.

அரிசி, சீனி, மா போன்ற அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய தலா 3000 ரூபா பெறுமதியான உணவுப் பொதிகள் 40 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

இப்பொருட்கள் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக பாதிக்கப்பட்ட தினக்கூலி தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நோயாளிகளுக்குத் தேவையான அத்தியாவசிய மருந்துப்பொருட்களின் ஒரு தொகுதியை அரச மருத்துவ உத்தியோகத்தர்கள் சங்கத்தின் சார்பில் விசேட வைத்திய நிபுணர் றிப்ஸான் ஜெமீல், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் அலாத் எம்.ஹனிபாவிடம் கையளித்தார். அரச மருத்துவ உத்தியோகத்தர் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் டாக்டர் சுகைல் அஹமட், கிளைத் தலைவர் டாக்டர் சியாத் மற்றும் செயலாளர் டாக்டர் அலாவுதீன் ஆகியோரும் காணப்படுகின்றனர். (சம்மாந்துறை நிருபர்)

திருமலை - மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரியை இடமாற்றக் கோரி ஆர்ப்பாட்டம்

(அப்துல்சலாம் யாசிம்)

திருகோணமலை-மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் கடமையாற்றிவரும் வைத்திய அதிகாரியை உடனடியாக இடமாற்றுமாறு கோரி பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்வார்ப்பாட்டம் நேற்று (28) காலை 9.00 மணிமுதல் 12.00 மணிவரை இடம்பெற்றது.

எமது வைத்தியசாலை எமக்கு வேண்டும், நோயாளிகளை கவனிக்காத வைத்தியர் எமக்கு வேண்டாம், நோயாளர்களின் நோய்களை கூறும்போது கின்டலடிக்கும் வைத்தியர் வேண்டாம், டாக்டர் சோபா எமக்கு வேண்டாம் போன்ற வாசகங்களுடனான பதாகைகளை ஏந்தியவாறு மக்கள் கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன், தற்போது மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலை பொறுப்பதிகாரியாக கடமையாற்றிவரும் டாக்டர் சோபா கும்புரேகம என்பவர் அநாகரீகமான முறையில் தமது கடமைகளை மேற்கொண்டு வருவதுடன், நோயாளர்கள் வைத்தியசாலைக்கு செல்லும்போது தேவையற்ற வசனங்களை நோயாளர்களை துன்புறுத்தும் விதத்தில் பாவித்து வருவதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன்போது குறிப்பிட்டனர்.

இதேவேளை, ஆர்ப்பாட்டக்காரர்கள் வைத்தியசாலைக்கு உள்ளே சென்று கடமை நேர வைத்திய அதிகாரி டாக்டர் டுவான் பெரேராவிடம் மகஜர் ஒன்றினையும் கையளித்தனர்.

இம் மகஜரை திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பி வைப்பதாகவும், தற்போது குறித்த வைத்திய அதிகாரியான டொக்டர் சோபா கும்புரேகம கடமையில் இல்லையெனவும் அவர் வெளியே சென்றுள்ளதாகவும் கடமை நேர வைத்திய அதிகாரி ஆர்ப்பாட்டக்காரர்களிடம் தெரிவித்தார்.

இதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் இரண்டு நாட்களுக்குள் குறித்த வைத்தியரை இடமாற்றம் செய்யாவிட்டால் மீண்டும் பாரிய எதிர்ப்பினை காட்டுவதாகவும் இதன்போது தெரிவித்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பில் எரிபொருள் பற்றாக்குறையால் வீதிகளில் வாகனங்களின்றி வெறிச்சோட்டம்

(மட்டக்களப்பு நிருபர்)

நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் பற்றாக்குறை காரணமாக பிரதான வீதிகள், நெடுஞ்சுவைகள் என்பன வாகனங்களின்றி வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

வழமையாகவே வீதியைக் கடக்க முடியாத அளவுக்கு வாகன நெரிலைகக் காணப்படும் வீதிகளில் இப்பொழுது எந்நேரமும் கடந்து செல்ல முடிவதாக கால் நடையாக செல்வோரும், சைக்கிள்களில் பயணிப்போரும் சதெிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு – கொழும்பு நெடுஞ்சாலை, அதேபோல மட்டக்களப்பு – திருகோணமலை வீதி ஆகியன கடந்த ஓரிரு தினங்களாக வாகன நெரிசலின்றி கண்ணுக்கெட்டிய தூரம் வரை வெறிச்சோடிக் காணப்படுகின்றன

அதேவேளை, பஸ் கட்டணங்கள் எகிறிச் சென்றுள்ளதால் மக்கள் கால் நடையாகவும் சைக்கிள்களிலும் பயணம் செய்வதையும் காணமுடிகின்றது.

காணாமலாக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு நீதி கிடைக்கவேண்டும்; ஜே.வி.பி. எதிர்க்கட்சியாக செயற்படுவதே நாட்டுக்கு நல்லது

ஐக்கிய காங்கிரஸ் கட்சித் தலைவர் முபாறக் அப்துல் மஜீத்

(மாளிகைக்காடு நிருபர்)

சரணடைந்த அல்லது கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட முஸ்லிம்கள் விடயத்தில் காணாமல்போனோர் அலுவலகம் நீதியான விசாரணைகளை மேற்கொள்ளும் வகையில் நேர்மையாக செயல்படவில்லையென ஐக்கிய காங்கிரஸ் கட்சி குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளது.

இது சம்பந்தமாக காணாமலாக்கப்பட்டோர் அலுவலகத்துக்கு ஐக்கிய காங்கிரஸ் கட்சியினால் கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அதில் நாட்டில் நிலவிய யுத்தம் காரணமாக வடக்கு கிழக்கில் வாழ்ந்த பல முஸ்லிம்கள் 1983 முதல் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர்களுக்கு என்ன நடந்தது என்று இன்றுவரை எவருக்கும் தெரியவில்லை எனவும் அக்கட்சித் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

இன்று அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், 1990களில் முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாச, விடுதலைப் புலிகள், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் ஆகியோர் தேனிலவு கொண்டாடிய காலத்தில் பல நூற்றுக்கணக்கான முஸ்லிம் இளைஞர்கள் புலிகளால் கைதுசெய்யப்பட்டனர். அதேபோல் பல இளைஞர்கள் சரணடையாவிட்டால் அவர்களின் குடும்ப உறுப்பினர்களை கைதுசெய்வோம் என புலிகள் சொன்னதாலும் கல்முனை, மட்டக்களப்பு போன்ற ஊர்களில் இருந்த விடுதலைப் புலிகளின் முகாம்களில் முஸ்லிம் இளைஞர்கள் சரணடைந்தனர். தமது மகன்மாருக்காக அவர்களின் தந்தை, சகோதரர்களும் பிணையாக சரணடைந்தனர். இவர்களில் எனது சகோதரர் அக்றம் ரிழாவும் ஒருவர். அவரை புலிகள் எமது வீட்டுக்கு வந்து கைதுசெய்தனர். ஆகவே இவை பற்றிய பூரண அறிவு எனக்குண்டு. இவர்களுக்கு என்ன நடந்தது என்று இன்றுவரை தெரியவில்லை.

அதேபோல் 1990ஆம் ஆண்டு ஒக்ஸ்ட் மாதம் கல்முனையிலிருந்து காத்தான்குடி நோக்கிச் சென்ற 125 முஸ்லிம்கள் கருவாஞ்சிக்குடியை தாண்டியதும் குருக்கள் மடம் என்ற இடத்தில் வைத்து கடத்தப்பட்டனர். இவர்களில் எனது தந்தை அப்துல் மஜீத் மௌலவியும் ஒருவர். இவர்களுக்கும் என்ன நடந்தது என்றும் தெரியவில்லை என்பதுடன், யுத்தம் முடிந்த பின்னரும் இவர்கள் கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட இடம் தோன்றப்பட்டு விசாரணை நடத்தப்படவில்லை. நல்லாட்சி ஆட்சிக்காலத்தில் காணாமலாக்கப்பட்டோர் அலுவலகத்தினால் கல்முனையில் நடத்தப்பட்ட விசாரணையின்போது நானும் கலந்துகொண்டு முறையிட்டிருந்தேன். குறைந்தது குருக்கள் மடத்தில் கொல்லப்பட்ட முஸ்லிம்களின் அடக்கஸ்தலத்திற்கு பாதுகாப்புடன் சென்று அவர்களுக்காக கடவுளிடம் பிரார்த்திக்கும் மனிதாபிமான வசதிகளையாவது செய்து தரும்படி விசாரணைக்குழுவிடம் கேட்டிருந்தேன். ஆனாலும் எதுவித நடவடிக்கையும் இன்றுவரை எடுக்கப்படவில்லை.

ஆகவே, இது விடயத்தில் மேற்படி அலுவலகமும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும், நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவும் தலையிட்டு கடத்தப்பட்ட முஸ்லிம்களுக்கென தனியான அலுவலகம் திறக்கப்பட்டு எம்க்கான நீதி கிடைக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். அத்துடன், ஜேவிபியிடம் ஆட்சியை வழங்கினால் முதலில் அவர்கள் செய்யும் செயல் முஸ்லிம் திருமண சட்டத்தையும் முஸ்லிம் பாடசாலைகளையும் ஒழிப்பதுதான். கடந்த கால ஜேவிபியின் அறிக்கைகள் இதை காட்டுகின்றன. நாட்டில் ஊழல் ஒழிய வேண்டும். இனவாதம் ஒழிய வேண்டும், ஊழல்வாதிகளை ஒழிக்க மக்கள் ஒன்றுபட வேண்டும் என ஜேவிபியினர் கூறுகின்றனர். இதைத்தான் மஹிந்தவும் சொன்னார், மைத்திரியும் சொன்னார். ரணிலும் சொன்னார், சஜித்தும் சொன்னார். ஊழல் ஒழியவில்லை, ஊழல்வாதிகள் சிறையில் அடைக்கப்படவும் இல்லை. ஜேவிபியினர் இன்னமும் சங்கள போரினவாத நிலுச்சி நிரலில் உள்ளனர்.

நாம் ஜேவிபியிடம் கேட்கிறோம். இந்த நாட்டை சீரழித்தது ஊழல் அரசியல்வாதிகளை விட சிங்கள, பௌத்த பேரினவாதமும் ஏனைய இனங்களை ஒதுக்கியுமாகும் என்பதை முதலில் ஏற்பீர்களா? முன்னாள் அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ரப் தீகவாபியில் பறிக்கப்பட்ட காணிகளுக்கு மாற்றுக்காணி வழங்க முற்பட்ட போது அதற்கெதிராக ஜேவிபி அம்பாறையில் ஆர்ப்பாட்டம் செய்து காணி வழங்கலை தடை செய்தது. அதற்காக இன்றுவரை ஜேவிபி முஸ்லிம்களிடம் மன்னிப்பு கேட்டதா? முஸ்லிம்களின் திருமணச் சட்டத்தை மாற்ற வேண்டும், பாடசாலைகளை ஒழிக்க வேண்டும் என்ற ஜேவிபியின் கொள்கைகளிலிருந்து அக்கட்சி மீண்டுள்ளதா?

இலங்கை ஆட்சியாளர்களின் இனவாத செயல்பாடு காரணமாகவே நாடு தனது நற்பெயரை இழந்து இன்று சர்வதேசத்தின் உதவியை இழந்து பரிதவிக்கிறது. இனவாதத்தை கொள்கையாகக் கொண்ட ஜேவிபி ஆட்சிக்கு வருமானால் இதைவிட நாட்டுக்கு கெட்ட பெயர் வருமே தவிர, பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது. அமெரிக்கா, இந்தியா, ஜரோப்பிய நாடுகளின் கோபத்துக்கு நமது நாடு முகங்கொடுக்கும். இடதுசாரி கொள்கை என்பது பணக்காரனை பிடித்து அவன் பணத்தை பறித்து அவனை ஏழையுடன் இணைத்துவிடுட இருவரும் சமம் என்ற பொதுவுடமை கொள்கை கொண்டதாகும்.

ஆகவே, ஜேவிபியினர் தமது கம்யூனிச கொள்கைகளை விட்டுவிட்டு நமது நாட்டுக்கு ஏற்ற உண்மையான, நேர்மையான அரசியல் கொள்கைகளை வகுத்து, எந்த மதத்துக்கும் இனத்துக்கும் முன்னுரிமை என்றில்லாது சகல மதங்களும் இனங்களும் சமமாக பாவிக்கப்படுவார்கள் என அறிவிப்பார்களா? ஜேவிபி ஆளும் கட்சியாக இருப்பதைவிட எதிர்க்கட்சியாக செயற்படுவதே நாட்டுக்கு நல்லது - என்றார்.

கல்முனை கல்வி வலய ஆசிரியைகளின் இடமாற்றத்துக்கு மேல்நீதிமன்ற நீதிபதி இடைக்காலத் தடை உத்தரவு

(நூருள் ஹுதா உமர்)

கிழக்கு மாகாண கல்வி அமைச்சால் கல்முனை கல்வி வலயத்தில் கடமை புரியும் 07 ஆசிரியைகளுக்கு வேறு வலயங்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றத்துக்கு கல்முனை மேல்நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

அரசியலமைப்பின் உறுப்புரை 154 P (4) (b)யின் ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட உறுதிகேள் எழுத்தாணை மனு (Writ of Certiorari) கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி டிறொக்ஸி முன்னிலையில் கடந்த 24.02.2022ஆம் திகதி ஆதிப்பதிநகர அழைக்கப்பட்டது.

குறித்த வழக்கில் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி தருலேல்வரி பிள்ளைநாயகம், மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் ஜெ.அருளானந்தம் மற்றும் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டிருந்தனர்.

மனுதாரர்கள் தரப்பு வாதங்களைக் கேட்டறிந்த மேல்நீதிமன்ற நீதிபதி குறித்த வழக்கை மீண்டும் 27.06.2022 (திங்கட்கிழமை) அழைக்குமாறு உத்தரவிட்டார்.

குறித்த எழுத்தாணை மனு மீண்டும் நேற்று முன்தினம் (27) ஆதரிப்பதற்காக அழைக்கப்பட்டபோது, மனுதாரர்கள் சார்பாக தோன்றிய சட்டத்தரனிகள் கிழக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவையின் பிரிவு 185யின் கீழ் அங்கீகரிக்கப்படாத ஓர் இடமாற்றத்தை மனுதாரர்களுக்கு வழங்கியமை நியாயமற்றதும் சட்டத்திற்கு முரணானதுமாகும் என நீண்ட சமர்ப்பணங்களை முன்வைத்தனர்.

குறித்த சமர்ப்பணங்களில் மீது திருப்திபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி மனுதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடமாற்றத்துக்கு இடைக்கால தடை உத்தரவைப் பிறப்பித்துள்ள தோடு, எதிர்வரும் 01.08.2022 இல் நீதிமன்றில் தோன்ற பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் அனுப்புமாறு கட்டளை பிறப்பித்துள்ளார்.

குறித்த வழக்கில் மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரனி எம்.எம்.நூர்ஜஹானின் அறிவுறுத்தலில் சிரேஷ்ட சட்டத்தரனி ஆரிப் சம்சுதீன், சட்டத்தரனி காலித் முஹைமீன் மற்றும் சட்டத்தரனி முபாறக் முஅஸ்லம் ஆகியோர் தோன்றியிருந்தனர்.

ஆசிரியர்களது விடயத்தில் பராமுகமாக தொழிற்படுகிறது கிழக்கு மாகாண கல்வியமைச்சு

இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

(மட்க்களப்பு நிருபர்)

சுகாதாரத்துறையினர் எரிபொருளைப் பெற்றுக்கொள்ள வழிமுறையொன்றைப் பின்பற்றியதுபோல் ஆசிரியர்களது விடயத்தில் பராமுகமாகத் தொழிற்படும் கல்வியமைச்சின் ஆலோசனைகளை கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் அதிகாரிகள் கண்மூடித்தனமாக பின்பற்றுவதாக இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் அச்சங்கம் நேற்று (28) விடுத்துள்ள ஊடக அறிக்கையில் பரீட்சைத் திணைக்கள ஆணையாளராய் மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கான அனுமதிக்கடிதம் வழங்கியும் எதுவும் நடைபெறவில்லை.

தூர இடங்களில் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் மாத்திரமன்றி ஆசிரியர் சமூகத்தின் எரிபொருளைப் பெற்றுக்கொள்ளும் உரிமை முழுமையாக மறுக்கப்பட்டுள்ளது. இவைகளுக்கான எந்த முயற்சிகளையும் மேற்கொள்ளாத அதிகாரிகள் ஆசிரிய சமூகத்தை வதைக்கும் வகையிலான அறிவுறுத்தல்களை மாத்திரம் வெளியிடுவது சங்கடத்திற்குரியதாகும்.

பொதுப் பரீட்சைகள் மற்றும் பருவகால விடுமுறைகள் என்பவைகளுக்கு ஒரே நாட்காட்டி நாடுமுழுவதும் முன்னெடுக்கப்படும்போது கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கென தனியான முன்னெடுப்புகளை மேற்கொள்வதனால் எவ்விதமான பிரயோசனங்களும் கிடைக்கப்போவதில்லை.

எரிபொருளை மையமாகக்கொண்டு குறிப்பிட்ட காலப்பகுதிவரை பாடசாலைகளை மூடுவதாக விடுக்கப்படும் அறிவித்தல் கிழக்கு மாகாணத்திலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

அதிபர் மற்றும் அதிகாரிகளுக்கு தனியாக தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை வழங்குவதை இரத்துசெய்துவிட்டு பொதுவான கல்விப்புலத்தினர் விடுக்கவேண்டும். கைவிரல் அடையாளமிடும் இயந்திரப் பாவனை உடனடியாக அமுலுக்கு வரும்வகையில் நிறுத்தப்பட வேண்டும்.

குறிப்பிட்ட ஆசிரியர்களை மாத்திரம் வரவழைத்து நடத்தப்படும் பாடசாலைகளால் மாணவர்களுக்கான முழுப் பயனைப் பெறச் சந்தர்ப்பம் இல்லை என்பதுடன், எரிபொருள் பிரச்சினையால் கிழக்கு மாகாண முன்னணிப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களின் வருகையும் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை அதிகாரிகள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஆசிரியர்களது இவ்வாறான கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும். இல்லையேல் அடுத்த சில தினங்களில் பாடசாலை பகிஷ்கரிப்பு மற்றும் கவனயீர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதாக இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சிவநேசதுரை சந்திரகாந்தன் - மட்டு. சிறைச்சாலை அதிகாரிகளுக்கு இடையில் விசேட கலந்துரையாடல்

(மட்க்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கும் மட்டு. சிறைச்சாலை அதிகாரிகளுக்குமிடையில் விசேட கலந்துரையாடலொன்று இடம் பெற்றுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி எரிபொருள் பற்றாக்குறையின் காரணமாக சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப் பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவையாகிய சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் கடமைக்கு தடங்கல்கள் ஏற்படாதவகையில் எரிபொருளை விநியோகிப் பதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பிலும் தீர்க்கமான முடிவுகள் இதன்போது எட்டப்பட்டுள்ளன.

ஐஸ் போதைப்பொருளுடன் வாழைச்சேனையில் இருவர் கைது



(கல்குடா நிருபர்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஓட்டமாவடியில் ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக வாழைச் சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை காசித ஆலை இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய சுதிரவெளி விசேட அதிரடிப்படையினரோடு இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது ஓட்டமாவடி மற்றும் மாவடிச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த 44, 41 வயதுடைய இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து 30 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் அவர்களின் வீடுகளில் வைத்து விற்பனைக்கு தயார்படுத்தப்பட்டபோது கைதுசெய்யப்பட்டனர்.

மேலதிக நடவடிக்கைக்காக வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தம்பலகாமம் பிரதேச செயலகத்தின் ஊழியர்கள் சைக்கிளில் அலுவலகத்துக்கு

(கிண்ணியா நிருபர்)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக எரிபொருள் தட்டுப்பாடும் நிலவி வருகிறது. இதனை கருத்திற்கொண்டு தம்பலகாமம் பிரதேச செயலக உத்தியோகத்தர்களில் பலர் சைக்கிள் மூலமாக அலுவலகத்துக்குச் செல்கின்றனர். நேற்றும் (28) அலுவலகத்தை நோக்கி சென்றார்கள்.

பெற்றோல் தட்டுப்பாடு நிலைமையைக் கருத்திற்கொண்டே முன்மாதிரியாக செயற்பட்டு அரச சேவையில் ஈடுபட்டு வருகின்றார்கள். தம்பலகாமம் பிரதேச செயலகத்தை அன்மித்த உத்தியோகத்தர்களே இவ்வாறு சைக்கிள் மூலமாக தங்களது போக்குவரத்து சேவையை பெற்றோல் செலவின்றி இலகுவாக பயன்படுத்தி வருகிறார்கள்.

கிண்ணியாவில் உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் விற்பனைச் சந்தை திறப்பு

(கிண்ணியா நிருபர்)

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மக்கள் உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் உற்பத்தி தொடர்பில் கவனம் செலுத்துவதன் மூலம் குறித்த நெருக்கடியிலிருந்து ஏதோ ஓரளவிலாவது விடுபட முடியுமெனை தாம் நம்புவதாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம தெரிவித்தார்.

கிண்ணியா பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் (27) உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் விற்பனைச் சந்தையை பிரதம அதிதியாக கலந்துகொண்டு திறந்துவைத்தபோதே மேற்கண்டவாறு அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

தற்போது வெறுமனே பயனற்று காணப்படும் இடங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள வேண்டும். உணவுப்பொருட்கள் உட்பட அனைத்துப் பொருட்களின் விலைகளும் உயர்வடைந்துள்ளன. மக்கள் சிரமத்திற்கு மத்தியில் வாழ்கின்றனர். குறைந்தபட்சம் எமக்கு அவசியமான உணவுப்பொருட்களை நாமே உற்பத்திசெய்யும் வகையில் வீட்டுத் தோட்டத்தை மேற்கொள்ள வேண்டும். அனைத்துத் தரப்பினரையும் இது குறித்து அறிவுறுத்துமாறு அரசாங்க அதிபர் இதன்போது வேண்டிக்கொண்டார்.

காய்கறிவகைகள், பழங்கள், தைத்த ஆடைகள், சிற்றுண்டிகள், அலங்கார மீன்கள், மலர் வகைகள், கருவாடு வகைகள், தேனைப் பனைகள் உட்பட பல பொருட்கள் விற்பனைக்கு விடப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச்.மொஹமட் கனி, உதவி பிரதேச செயலாளர் எஸ்.பஹீமா, பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப் மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்

eastthamilan@gmail.com

போடியார் புலம்பல்!

எரிபொருள் தேடி அமைச்சர்களான ஹாபீர் நசீர் நானாவும்,காஞ்சனா மல்லியும் மத்தியகிழக்கு நாடுகளுக்கெல்லாம் எண்ணெய் பிச்சை எடுக்க போறாங்களாம் எலுவா?

அவங்க போய் மெய்யா மெய்யா ஏதும் புறண்டித்து வந்தாலும் ஒரு இரண்டு கிழமைய கடத்தலாம். மறுகா ஆர எந்த நாட்டுக்கு அனுப்பலாம் எண்டதப் பற்றியும் இப்பவே யோசிக்கோணும்..பாருங்க..

மூதூரில் பிணியாய்வு நிலையம், சிறுவர் பூங்கா திறந்துவைப்பு



(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை பிராந்திய சுகாதார பணிமனையின் நிதியுதவியினால் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட கட்டடபிரச்சான் கிளினிக் நிலையம் மற்றும் அவ்வளாகத்தில் மூதூர் பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட சிறுவர் பூங்காவும் நேற்று முன்தினம் (27) மாலை மக்களின் பாவனைக்காக உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஹில்மி முகைதீன் பாவாவின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், வைத்தியர் சமீம், திருகோணமலை மாவட்ட வைத்திய அதிகாரி, மூதூர் பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.அரூஸ், வட்டார உறுப்பினர்கள், தலைவர்கள் மற்றும் பிரதேச மக்களும் கலந்து சிறப்பித்தனர்.

பாழடைந்த கட்டடம் ஒன்றிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்பு

ஏறாவூர் பொலிஸ் பிரிவில் சம்பவம்

(மண்டூர் நிருபர்)

ஏறாவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நெடியமடு பகுதியிலுள்ள பாழடைந்த கட்டடப் பகுதியிலிருந்து ஆணொருவரின் சடலம் கடந்த ஞாயிற்றுக்கிழமை (26) மீட்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளர்.

வோட்வாடி வீதி, களுவன்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த 7 பிள்ளைகளின் தந்தையான பொன்னுத்துரை கருணாகரன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

நீண்ட நாட்களாக தனது மனைவிக்கிடையில் ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணத்தினால் மனவேதனையடைந்த நிலையில், வீட்டைவிட்டு வெளியேறிவர் பல நாட்களாகியும் வீடு திரும்பாத நிலையில் குறித்த பாழடைந்த கட்டடப்பகுதிக்கு சென்ற அப்பிரதேசத்தைச் சேர்ந்தவர் ஒருவர் குறித்த நபர் மரணமடைந்த நிலையில் காணப்பட்டதைக் கண்டு சம்பவத்தை உறவினர்களுக்கு தெரிவித்ததாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது.

ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வேண்டுதலுக்கமைவாக சம்பவ இடத்திற்குச் சென்ற பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நசீர் சடலத்தை பார்வையிட்டதுடன், சடலத்தை பிரேதப் பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் உறவினர்களிடம் ஒப்படைத்தார். மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கடற்படையினரின் வாகனம் மோதி விபத்து; மூவர் கந்தளாய் தள வைத்தியசாலையில்

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை - ஹபரன பிரதான வீதியின் கித்துல் ஊற்று என்னுமிடத்தில் கடற்படையினர் சென்ற கெப் வாகனம் ரிப்பருடன் மோதியதில் மூன்று கடற்படை வீரர்கள் படுகாயங்களுடன் கந்தளாய் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட் டுள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் (27) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரி விக்கின்றனர்.

கடற்படை கெப் வாகனம் கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கிச் சென்றவேளையில் கந்தளாய் கித்துல் ஊற்று என்னுமிடத்தில் முன்னால் சென்ற ரிப்பர் வாகனத்தை முந்திச்செல்ல முற்பட்டபோது இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காயமடைந்த கடற்படை வீரர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றார்கள்.

வாழைச்சேனை ஆயிஷா வித்தியாலய புதிய அதிபராக சஹாப்தீன் நியமனம்

(மீராவோடை நிருபர்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்திற்கு புதிய அதிபராக நேற்று (28) என்.சஹாப்தீன் நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பாடசாலையில் நிலவிய அதிபர் வெற்றிடத்திற்கே இவர் புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ரிதிதென்ன அல்-இக்ரஹ் வித்தியாலயத்தில் மிகவும் சிறப்பான முறையில் அதிபராக சேவையாற்றிவந்த என்.சஹாப்தீனுக்கு வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்தில் மகத்தான வரவேற் பளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில், அதிதிகளாக கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வீ.ரீ.அஜ்மீர், வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை அதிபர் ஏ.எம்.தாஹிர், வை.அஹமட் வித்தியாலய அதிபர் யூ.எல்.எம்.ஹரீஸ், ஹைராத் வித்தியாலய அதிபர் யூ.எல்.அஹமட் லெப்பை மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கச் செயலாளர் எஸ்.ஐ.எம்.பஸீல், உறுப்பினர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

அமெரிக்காவில் பரபரப்பு

ஆள் அரவமின்றி நின்ற கொள்கலனுக்குள் அழுகுரல்

அகதிகள் 46 பேரின் சடலங்கள்; உயிருக்கு போராடிய 16 பேர் மீட்பு!

உலக செய்திகள்

அமெரிக்காவில் டெக்சாஸ் மாகாணத்தில் வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த கென்டெய்னர் ஒன்றிலிருந்து 46 அகதிகளின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதுடன், மேலும் குறித்த கென்டெய்னரிலிருந்து உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த 16 பேர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் பரபரப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க நேரப்படி, திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு டெக்சாஸ் மாகாணத்தில் சான் ஆண்டானியோ நகரில் வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த கென்டெய்னரிலிருந்து அழுகுரல் வருவதைக் கேட்டு, அக்கம் பக்கத்தினர் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளனர்.

இதனையடுத்து விரைந்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், குறித்த கென்டெய்னரை திறந்து பார்த்தபோது, அங்கே 46 பேர் சடலங்களாகக் கிடந்துள்ளனர். 16 பேர் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தனர். உடனடியாக மீட்புப் பணிகள் நடைபெற்றன. மீட்கப்பட்ட 16 பேரில் 12 பேர் பெரியவர்கள், 4 பேர் குழந்தைகள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

18 சக்கரங்கொண்ட குறித்த கென்டெய்னர் மூலம் வெளிநாடுகளுக்குத் தப்பிச்செல்ல நினைத்த 100இற்கும் மேற்பட்ட அகதிகள் சென்றிருக்கலாம் என்றும் கென்டெய்னருக்குள் காற்று இல்லாமை மற்றும் வெப்பம் காரணமாக மேற்படி 42 பேர் உயிரிழந்திருக்கக்கூடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவுக்குள் அகதிகளாக வந்து, அங்கிருந்து வெளிநாடுகளுக்குத் தப்பிச்செல்ல முயல்பவர்கள், இதுபோன்று பலியாகும் நிகழ்வுகள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மெக்சிக்கோவில் ஒரே பாலின திருமணம்

மெக்சிக்கோவில் ஒரே பாலினத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான ஜோடிகளுக்கு ஒன்றாக திருமணம் நடைபெற்றது. மெக்சிக்கோ நகர நீதிமன்றத்திற்கு முன் நடைபெற்ற மிகப்பெரிய விழாவில் இசைக்குழுவினரின் பாரம்பரிய பாடல்களுக்கு மத்தியில் திருமணம் செய்துகொண்டனர். அவர்கள் தங்களது காதலை அதிகாரப்பூர்வமாக்க விரும்பியதால் திருமணம் செய்துகொண்டதாக தெரிவித்தனர்.

மிஸ்டர் ஹேப்பி பேஸ்!!

அமெரிக்காவில் நடைபெற்ற உலகின் அழகற்ற தோற்றம்கொண்ட நாய்களுக்கான போட்டியில் 'மிஸ்டர் ஹேப்பி பேஸ்' என்று பெயரிடப்பட்டிருந்த நாயொன்று பட்டத்தை தட்டிச்சென்றது.

இந்த வித்தியாசமான போட்டியில், விதவிதமாள நாய்கள் பங்கேற்றன. அழகற்ற தோற்றம் கொண்டிருந்தாலும் அவை பாராமரிப்பாளர்களின் பாசத்தை பெற்றிருந்தன.

இன்று 125ஆவது நாளாகவும் தொடரும் போர்

உக்ரைன் வணிக வளாகம் மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல்

16 பேர் பலி; 59 பேர் படுகாயம்

ஜி7 அமைப்பு கடும் கண்டனம்

உக்ரைனில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கூடியிருந்த வணிக வளாகமொன்றின் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 16 பேர் உயிரிழந்துள்ளதுடன், 59இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

இத்தாக்குதலை உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி கண்டித்துள்ளதுடன், அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், கனடா உள்ளிட்ட உலக நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இதனிடையே உக்ரைனிலுள்ள வணிக வளாகம் மீது ரஷ்ய இராணுவம் நடத்திய ஏவுகணைத் தாக்குதலுக்கு ஜி7 அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் அருவருக்கத்தக்க இந்தச் செயல் மிகப்பெரிய போர்க் குற்றமாகும் என்று ஜி7 அமைப்பு தெரிவித்துள்ளது.

இதனிடையே உக்ரைனின் கார்கீவ் நகரில் ரஷ்யப் படைகள் நடத்திய தாக்குதலில் 5 பேர் உயிரிழந்தனர். 30இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர்த் தொடுத்தது. இந்த இரு நாடுகளுக்கிடையேயான போர் இன்று 125ஆவது நாளாகவும் தொடர்ந்தும் நடைபெற்றுவருகிறது.

ரஷ்யாவின் தொடர் தாக்குதல்களால் உக்ரைன் தலைநகர் கீவ் மற்றும் இரண்டாவது பெரிய நகரமான கார்கீவ் உள்ளிட்ட பலவேறு நகரங்கள் உருக்குலைந்துள்ளன. மேலும் மரியுபோல், கெர்சன் உள்ளிட்ட முக்கிய நகரங்களை ரஷ்யப் படை கைப்பற்றியுள்ளது. தற்போது கிழக்கு உக்ரைனில் ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில், உக்ரைனின் மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை உள்ள கிரமென்சுக் தொழிற்துறை நகரில் மக்கள் நடமாட்டம் மிகுந்த வணிக வளாகத்தின் மீது ரஷ்யா நேற்றுமுன்தினம் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. 1000இற்கும் மேற்பட்டோர் வணிக வளாகத்துள் இருந்த நிலையில், கட்டடம் முழுவதும் தீப்பற்றி எரிந்தது.

இந்தத் தாக்குதலில் அங்கிருந்த 16 பேர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் 59 பேர் படுகாயமடைந்துள்ளனர். இது, தெரியாமல் நடந்த விபத்து அல்ல, திட்டமிட்டு நடந்த தாக்குதல் என உக்ரைன் ஜனாதிபதி ஸெலன்ஸ்கி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தாக்குதல் நடந்தபோது அங்காடியில் ஏறக்குறைய 1,000 பேர் இருந்திருப்பார்கள். இதில் எத்தனை பேர் ஏவுகணைத் தாக்குதலில் பலியாகியிருப்பார்கள் என்பதை கற்பனை கூட செய்துபார்க்க முடியவில்லை. மக்கள் இயல்பு வாழ்க்கை வாழ்வதைப் பார்க்க அவர்களுக்கு பிடிக்கவில்லை. அந்த கோபத்தில்தான் ரஷ்யா இதுபோன்று நாசவேலைகளில் ஈடுபடுகிறது'' என்று தெரிவித்தார்.

பூ ராமு மறைவு; ஸ்டாலின் இரங்கல்



நடிகரும் நாடகக் கலைஞருமான பூ ராமு உடல்நலக் குறைவு காரணமாக நேற்று முன்தினம் (27) காலமானார்.

அவரது மறைவுக்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள இரங்கல் குறிப்பில்,

"தனது திரையுலக நடிப்பால் தமிழக மக்களின் நெஞ்சங்களில் இடம்கொண்ட நடிகர் தோழர் பூ ராமு உடல்நலக்குறைவால் மறைவெய்தினார் என்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன். வீதி நாடகக் கலைஞராக இடதுசாரி கருத்துகளை வெகு மக்களிடம் கொண்டுசென்ற அவரது பணியை முற்போக்காளர்கள் என்றும் நினைவுகூர்வார்கள்.

'பூ' திரைப்படத்தின் வழியாகத் தனது நடிப்பாற்றலால் திரையுலகில் தடம் பதித்த அவர், நெடுநல்வாடை, பரியேறும் பெருமாள் போன்ற திரைப்படங்கள் வழியாகத் தன்கென மக்களின் மனங்களில் தனியிடம் பெற்றார் என்றே சொல்லவேண்டும். தனது பயணத்தை நிறைவுசெய்துகொண்ட தோழர் பூ ராமுவின் பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினர், திரையுலகக் கலைஞர்கள் உள்ளிட்ட தோழர்கள் அனைவருக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

இயக்குநர் சசி இயக்கிய 'பூ' படத்தில் அறிமுகமாகி கவனம் பெற்றவர் ராமு. நீர்ப்பறவைகள், தங்க மீன்கள், வீரம், ஜில்லா, நெடுநல்வாடை, பரியேறும் பெருமாள், கர்ணன், சூரரைப் போற்று எனப் பல படங்களில் நடித்துள்ளார்.

மாரடைப்பால் சென்னையிலுள்ள ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் சேர்க்கப்பட்டநிலையில், சிகிச்சை பலனின்றி அவர் காலமானார்.

கடும் மின்சார நெருக்கடி

இருளில் மூழ்கிய ஜப்பான்: 3.7 கோடி பேர் அவதி

கடும் மின்சார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் ஜப்பான், அந்நாட்டு மக்களை மின் சிக்கனத்தைக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

ஜப்பானில் மழைக்காலம் முடிந்து கோடைக்காலம் தொடங்கியுள்ளது. இதுவரை இல்லாதளவுக்கு அங்கு 35 டிகிரி செல்சியஸுக்கும் அதிகமான வெப்பநிலை பதிவாகியிருப்பதால், மின்சார பயன்பாடு அதிகரித்துள்ளது.

நிலநடுக்கம் காரணமாக அந்நாட்டின் அணுமின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது மின்சார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. டோக்கியோ மற்றும் அதனை சுற்றியிருக்கும் பகுதிகளிலுள்ள 3 கோடியே 7 இலட்சம் மக்களை வீடுகளில் மின் விளக்குகளை அணைக்குமாறு அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

ஜி7 உச்சிமாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ருடோ மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மெக்ரொன் ஆகியோரை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சந்தித்தபோது....

குளோரின் வாயுவை சுவாசித்த 10 பேர் மூச்சுத் திணறி உயிரிழப்பு

251 பேர் வைத்தியசாலையில் சேர்ப்பு

ஜோர்டானில் குளோரின் வாயுவை சுவாசித்த 10 பேர் மூச்சுத் திணறி உயிரிழந்துள்ளனர். மேலும் 251 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

Aqaba துறைமுகத்தில் அமைந்துள்ள சேமிப்புத் தொட்டியிலிருந்து குளோரின் வாயு கசிந்ததால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

ஏற்றுமதி செய்வதற்காக 25 தொன் எடை கொண்ட கொள்கலனில் குளோரின் வாயு கொண்டுசெல்லப்பட்டபோது திடீரென வாயு கசிந்துள்ளது.

இந்நிலையில், அரசு வெளியிட்ட வீடியோவில், சேமிப்புத் தொட்டி விள்ச்சிலிருந்து திடீரென கீழே விழுந்து கப்பலின் மேல்தளத்தில் மோதுவதும், அப்போது மஞ்சள்நிற திரவம் வெளியானதை தொடர்ந்து மக்கள் அங்குமிங்கும் ஓடும் காட்சியும் பதிவாகியுள்ளன.

எரிபொருள் தட்டுப்பாடு:

நாடு முழுவதும் மரக்கறி விநியோகம் முற்றாக பாதிக்கப்படும் ஆபத்து

மரக்கறி உற்பத்திகளை சந்தைக்கு கொண்டு செல்லுதல் மற்றும் நாடு முழுவதும் விநியோகிப்பது முற்றாக ஸ்தம்பிக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை பொருளாதார மத்திய நிலையங்கள் மற்றும் மொனிங் சந்தை வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் அருண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

மீண்டும் எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டமையே இதற்கு காரணமாகும். கமத்தொழில் வளர்ச்சி குறித்து அரசாங்கம் எவ்வித அக்கறையும் காட்டாது எடுக்கும் முடிவுகள் காரணமாக மரக்கறிகளை பயிரிடும் விவசாயிகள் முற்றிலும் பயிர்ச் செய்கையில் இருந்து விலகிச் செல்வதை நிறுத்த முடியாது போகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, தம்புள்ளை பொருளாதார மத்திய அபிவிருத்தி நிலையத்திற்கு கொண்டுவரப்படும் விவசாய உற்பத்திகள் எண்ணிக்கை வெகுவாகவே குறைந்துள்ளதுடன் மேற்படி உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக வரக்கூடிய வர்த்தகர்களின் எண்ணிக்கையும் வெகுவாக குறைந்துள்ள நிலையில் டீசல், பெற்றோல் எரிபொருட்களின் விலைகளை திடீர் திடீர் என அதிகரிப்பதால் நாட்டின் சகல பொருளாதார அபிவிருத்தி மத்திய நிலையங்களுக்கும் வரக்கூடிய வர்த்தகர்கள் மற்றும் விவசாயிகளின் எண்ணிக்கை வெகுவாகவே குறைந்து விட்டதாக தம்புள்ளை பொருளாதார மத்திய அபிவிருத்தி நிலையத்திற்கு வரும் விவசாயிகளும் வர்த்தகர்களும் தெரிவித்துள்ளனர்.

தம்புள்ளை பொருளாதார மத்திய அபிவிருத்தி நிலையத்திற்கு நாட்டில் நாலா திசைகளில் இருந்தும் மரக்கறி மற்றும் ஏனைய விவசாய உற்பத்திகள் கொண்டு வரப்படுவதுடன் இவற்றை கொள்வனவு செய்வதற்காக முன்னெரெல்லாம் வர்த்தகர்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்த நிலையில், தற்போதைய எரிபொருள் விலையேற்றத்தின் காரணமாக பொருளாதார மத்திய அபிவிருத்தி நிலையத்திற்கு வரக்கூடிய மொத்த வர்த்தகர்களின் எண்ணிக்கையில் பாரிய சரிவுகள் ஏற்பட்டுள்ளதால் தொடர்ந்தும் இவ்வாறான அபிவிருத்தி நிலையங்களை திறந்து வைத்து வர்த்தகம் நடத்தக்கூடிய சாதகமான சூழ்நிலை ஒன்று தற்போது இற்நாட்டில் காணப்படவில்லை என்பதால் விவசாயிகள் தங்களின் விவசாயத்துறையிலிருந்து முற்றாக ஒதுங்கிக் கொள்ளக்கூடிய ஒரு பாரிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் வர்த்தகர்களும் விவசாயிகளும் தெரிவித்துள்ளனர்.

கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று பேர் அநுராதபுரத்தில் கைது

(அநுராதபுரம் செய்தியாளர்)

அநுராதபுரம் கும்பிச்சங்குளம் பகுதியில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மூவரை குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் அநுராதபுரம் தகய்யாகம பகுதியில் வைத்து சந்தேக நபர்கள் மூவரை அநுராதபுரம் தலைமைய பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் அநுராதபுரம் புதுபுர மற்றும் தகய்யாகம பகுதிகளை வசிப்பிடமாக கொண்ட 29,34,33 வயதுடையவர்கள் என்பது ஆரம்பட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

குறித்த பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப் பட்டுவரும் சுற்றுலா விடுதியொன்றில் வைக்கப்பட்டிருந்த நிர்மாணத்துறைக்கு தேவையான ஆறு இலட்சத்திற்கும் அதிகம் பெறுமதி வாய்ந்த பொருட்கள் காணாமல் போயுள்ளதாக அநுராதபுரம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவில் அதன் உரிமையாளர் செய்த முறைப்பாட்டினை அடுத்து தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வந்துள்ள நிலையிலேயே சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதர் வித்தானகம கேவின் ஆலோசனைப்படி பொலிஸ் சார்ஜன்ட் அநுர தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

காலி விளையாட்டரங்கைச் சுற்றி எரிவாயு சிலிண்டர்கள்



இலங்கைக்கு சுற்றுலா மேற்கொண்டிருக்கும் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையிலான டெஸ்ட் போட்டி, காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இன்று (29) ஆரம்பமாகவிருக்கிறது. இந்நிலையில், அந்த மைதானத்தை சுற்றி, மஞ்சள் மற்றும் நீல நிறங்களிலான சமையல் எரிவாயு வெற்று சிலிண்டர்கள் வரிசையாக அடுக்கிவைக்கப் பட்டுள்ளன. இந்த சிலிண்டர்கள் யாவும் 25 நாட்களுக்கும் மேலாக அங்கு வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கூரிய ஆயுதத்தால் தாக்கி நபர் ஒருவர் உயிரிழப்பு

கட்டுநாயக்கவில் சம்பவம்

கட்டுநாயக்க பொலிஸ் பிரிவிற்குட்பட்ட 18ஆம் கட்டை பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபர் ஒருவர் கொலை செய்யப் பட்டுள்ளார். கட்டுநாயக்க ஆலை வீதி பகுதியில் தற்காலிகமாக தங்கியிருந்த 41 வயதான நபர் ஒருவரே கொல்லப்பட்டுள்ளார். தனிப்பட்ட பிரச்சினை காரணமாக ஏற்பட்ட முரண்பாடு முற்றியதையடுத்து, கொலை சம்பவம் இடம் பெற்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணை களிலிருந்து தெரியவந்துள்ளது.

இரண்டு நபர்களினால் கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு குறித்த நபர் கொலை செய்யப்பட்டுள் ளதாகவும், அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதோடு கொலைக்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் கட்டுநாயக்க பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

ஊவா மாகாண ஆளுநர் தலைமையில்

அத்தியாவசிய சேவைகள் வழங்குவதிலுள்ள பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல்

(பதுளை நிருபர்)

தற்போதைய எரிபொருள் நெருக்கடிகளுக்கு மத்தியில் கல்வி மற்றும் அத்தியாவசிய சேவைகளை வழங்குவதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பிலான கலந்துரையாடல் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில் இடம்பெற்றது.

ஊவா மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று(28) இடம்பெற்ற குறித்த கலந்துரையாட லில், தனியார் பயணிகள் பொது போக்குவரத்து சேவைகள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டது.

தனியார் பஸ்கள் மற்றும் சிசு சரிய பஸ்களுக்கு எவ்வித தடையுமின்றி எரிபொருள் வழங்கப்பட வேண்டிய முறை தொடர்பில் உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கியதுடன் அதற்கான வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்துமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

மாகாண பிரதான செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட அத்தியாவசிய சேவைகளை வழங்கும் இலகுரக வாகனங்கள் மற்றும் பாடசாலை போக்குவரத்து வேலைகளுக்கு எரிபொருள் வழங்கும் முறைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

அத்தியாவசிய சேவைகள் மற்றும் பொதுப் போக்குவரத்தை தடங்கலின்றி தொடரும் நோக்குடன் அறிமுகப்படுத்தப்படவுள்ள இந்த திட்டத்தின் ஊடாக முறைகேடுகள் செய்து பயனைப் பெற முயற்சிக்கும் நபர்களுக்கு எரிபொருள் வழங்குவதை இடைநிறுத்தவும் இதன்போது ஆளுநர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்த கலந்துரையாடலில் ஊவா மாகாண பிரதான செயலாளர் விஜயரத்ன, ஆளுநரின் செயலாளர் எம்.எம்.விஜயநாயக, பிரதி பிரதான செயலாளர் (திட்டமிடல்) ஆர்.எச்.சி. பிரியந்தி, மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சந்தியா அபன்வெல, மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் சி.அத்தநாவத்த, கூட்டுறவு எரிபொருள் நிலைய மேலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

உரத்தை விநியோகிக்க விசேட வேலைத்திட்டம்

நாட்டில் எதிர்வரும் ஜூலை மாதம் 07ஆம் திகதி யிலிருந்து 15ஆம் திகதி வரை விவசாயிகளுக்கு உரத்தை விநியோகிப்பதற்கு விவசாய அமைச்சு விசேட வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

இதற்கமைவாக, விவசாய அமைச்சின் கீழ் செயற்படும் அனைத்து நிறுவனங்களையும் சேர்ந்த ஊழியர்களின் விடுமுறைகள் எதிர்வரும் ஜூலை மாதம் 06ஆம் திகதியில் இருந்து இரத்துச் செய்யப்படுவதாக விவசாய அமைச்சு அறிவித்துள்ளது.இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் 65ஆயிரம் மெட்ரிக் தொன் யூரியா உரம் எதிர்வரும் ஜூலை மாதம் 6ஆம் திகதி நாட்டுக்கு கிடைக்கவுள்ளது.

அந்த உரம் எதிர்வரும் 7ஆம் திகதியிலிருந்து 15ஆம் திகதி வரை பகிர்ந்தளிக்கப்பட உள்ளது. இதனைக் கருத்திற்கொண்டே விவசாய அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்களின் விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

வேலை செய்வோரை விட சும்மா இருப்போர் அதிகம்

இலங்கை தொடர்பில் வெளியான தகவல்

இலங்கையில் ஒரு தொழிலைச் செய்பவர்களை அல்லது குறைந்த பட்சம் தொழில்வாய்ப்பை நாடுபவர்களை விடவும் கூடுதல் தொகையினர் எதுவும் செய்யாமல் இருக்கிறார்கள் என்று புள்ளிவிபர அலுவலகதரவுகள் காட்டுகின்றன.

குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் 2021 இலங்கை தொழிற்படை ஆய்வு (Sri Lanka Labour Force Survey) பற்றிய வருடாந்த செயற்திறிக்க கடந்தவாரம் வெளியிடப்பட்டது. அதன் பிரகாரம் 2021 இறுதியளவில் பொருளாதார ரீதியில் செயற் படுகின்ற சனத்தொகை 85இலட்சத்து 50ஆயிரம் என்றும் பொருளாதார ரீதியில் இயக்கமற்று இருக்கும் சனத்தொகை 85இலட்சத்து 80ஆயிரம் (இதில் பெண்கள் 73சதவீதம்) என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

ஒரு நாட்டின் தொழில் செய்யக்கூடிய அல்லது குறைந்தபட்சம் தொழில்வாய்ப்பை நாடுகின்ற சனத்தொகை எந்தளவுக்கு இருக்கிறது என்பதை தொழிற்படை பங்கேற்பு வீதம் (labour Force Participation Rate) காட்டுகிறது. இலங்கையைப் பொறுத்தவரை, இந்த வீதம் அதிர்ச்சிதரும் அளவுக்கு குறைவானதாக இருப்பதுடன் மேலும் வீழ்ச்சி கண்டுகொண்டு போகிறது போன்று தோன்றுகிறது.

உதாரணமாக, 2021 இறுதியளவில் இலங்கையின் தொழிற்படை பங்கேற்பு வீதம் 49.9 ஆக மதிப்பிடப்பட்டது.

அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகளின் மட்டங்களுடன் ஒப்பிடும்போது இது மிகவும் கீழ்ப்படி நிலையில் உள்ளது. அமெரிக்காவின் தொழிற் படை பங்கேற்பு வீதம் இவ்வருடம் மே மாத மளவில் 62.3 ஆக இருந்த அதேவேளை, அவுஸ்திரேலியாவின் வீதம் அதே மாதமளவில் 66.7ஆக விளங்கியது.மலேசியாவில் ஏப்ரல் மாதம் இந்த வீதம் 69.4ஆக அதிகரித்தது. கொவிட் வைரஸ் பெருந்தொற்று காரணமாக கடந்த இரு வருடங்களாக தொழிற்சந்தையை விட்டு வெளியேறியவர்கள் உலகளாவிய பணவீக்கத்துக்கு மத்தியில் மீண்டும் தொழிற்படைக்கு வந்துகொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இலங்கையில் 2020இல் 50.6ஆக இருந்த தொழிற்படை பங்கேற்பு வீதம் 2021 இல் 49.9 ஆக குறைந்தது. இது கூடுதலான மக்கள் தங்களது தொழில்களை விட்டு விலகுவதையும் அதனால் தொழிற்படை சுருங்குவதையும் காட்டுகிறது. பாரதூரமான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இது நாட்டுக்கு பெரும் பாதகமான ஒரு போக்காகும்.

பொருளாதார நெருக்கடி மேலும் தீவிரமடை யும் போது மேலும் தங்கள் தொழில்களை இழக்க நேரிடும்போது இலங்கையின் தொழிற்படை மேலும் சுருங்கும் என்று அஞ்சப்படுகிறது.

இதன் காரணத்தினால்தான் இலங்கையின் வேலையின்மை வீதம் 5.1 என்று கூறப்படுவது தவறானதும் தொழிற்படை பங்கேற்பு வீதத்துடன் ஒப்பிட்டு நோக்கத்தக்கதுமான தொழிற்றகுதியின் உண்மையான நிலைவரத்தை மறைப்பதுமாகும்.

அமைச்சரவைத் தீர்மானங்கள்...

4ஆம் பக்கத் தொடர்ச்சி...

11. நொத்தாரிஸ் கட்டளைச் சட்டத்திற்கான திருத்தங்களை அறிமுகப்படுத்தல்

காணி மோசடிகள் தொடர்பாக சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுக்கும் நோக்கில் புதிய ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்காக நொத்தாரிஸ் கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக 2021 ஜூலை மாதம் 19 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, நொத்தாரிஸ் ஆலோசனைக் குழுவால் தயாரிக்கப்பட்டுள்ள அடிப்படை சட்டமூலத்தின் பிரகாரம், பதிவாளர் நாயகத்தின் கருத்துகளையும் கேட்டறிந்து சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

12. ஆவணங்களைப் பதிவு செய்யும் கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்

காணிகள் தொடர்பான மோசடிகள் மற்றும் முறைகேடுகளைத் தடுப்பதற்காகப் புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக ஆவணங்களைப் பதிவு செய்யும் கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக 2021 ஜூலை மாதம் 19 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

13. இருபத்திரண்டாவது அரசியலமைப்பு திருத்தம்

இருபத்திரண்டாவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பான அடிப்படைச் சட்டமூலத்திற்கு 2022.06.20 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கொள்கை ரீதியான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் இருபத்திரண்டாவது அரசியலமைப்பு திருத்தம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த சட்டமூலம் அரசியலமைப்புக்கு இணங்கியொழுகவில்லை என்பதை சட்டமா அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, இருபத்திரண்டாவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

14.பெற்றோலியப் பொருட்களை உற்பத்தி செய்கின்ற நாடுகளில் நிறுவப்பட்டுள்ள கம்பனிகளுடன் மேற்கொள்ளப்படும் நீண்டகால ஒப்பந்தங்களின் அடிப்படையில் எரிபொருளைப் பெற்றுக்கொள்ளல்

நாட்டின் ஒட்டுமொத்த எரிபொருள் விநியோகத்தில் 90 வீதமானவை இவங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படுவதுடன், எஞ்சிய 10 வீதமான விநியோகம் இந்திய ஒயில் கம்பனியால் மேற்கொள்ளப்படுகின்றது. தற்போது இலங்கை முகங்கொடுத்துள்ள வெளிநாட்டு செலாவணி நெருக்கடியால் நாட்டில் தொடர்ச்சியான எரிபொருள் விநியோகத்தை உறுதிப்படுத்துவது மிகவும் சவாலிமிக்க பணியாகவுள்ளது. இந்நிலைமையின் கீழ் பெற்றோலிய உற்பத்திகளை மேற்கொள்கின்ற நாடுகளில் நிறுவப்பட்டுள்ள எண்ணெய்க் கம்பனிகளுடன் நீண்டகால ஒப்பந்தங்களை மேற்கொண்டு எமது நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிக்கு அழுத்தங்கள் ஏற்படாத வகையில் குறித்த கம்பனிகளின் நிதியைப் பயன்படுத்தி எரிபொருளை இறக்குமதி செய்து விநியோகிப்பதற்காக அக்கம்பனிகளுக்கு வாய்ப்புகளை வழங்குவது பொருத்தமெனக் கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, முறைதாழ்ந்த பொறிமுறைகளைப் பின்பற்றி தெரிவுசெய்யப்படும் என்னெய்க் கம்பனிகளுடன் நீண்டகால ஒப்பந்தங்களை மேற்கொண்டு இலங்கைக்கான எரிபொருள் இறக்குமதி செய்தல், பகிர்தளித்தல் மற்றும் விநியோகித்தலுக்காக குறித்த கம்பனிகளுக்கு வாய்ப்பு வழங்குவதற்காக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

15. ஜெட் ஏ-1 விமானங்களுக்கான எரிபொருளை தொடர்ச்சியாக விநியோகிப் பதை உறுதிப்படுத்துவதற்காக புதிய விநியோகஸ்தர்களை அடையாளம் காணல்

இலங்கைக்கும் மற்றும் இலங்கைக்கு வெளியேயும் விமான சேவைகளின் தொழிற்பாடுகளுக்காக நாளாந்தம் 1.2 மில்லியன் லீற்றர் எரிபொருள் தேவைப்படுவதுடன், நாட்டில் தற்போதைய நிலைமையின் கீழ் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு விமானக் கம்பனிகளின் தொழிற்பாடுகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்வதற்குத் தேவையான குறைந்தபட்ச எரிபொருள் அளவைக் கூட விநியோகிப்பதற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு இயலாது போயுள்ளது. இந்நிலைமையின் கீழ் விமான சேவை தொழிற்பாடுகள் முடக்கப்படாமல் தொடர்ந்து மேற்கொண்டு செல்வதற்கு இயலுமை கிட்டும் வகையில் இங்கை துறைமுக அதிகாரசபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள எரிபொருள் களஞ்சியக்காரர்களுக்கு ஜெட் ஏ-1 விமானங்களுக்கான எரிபொருளை இறக்குமதி செய்தல், விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தலுக்கு அனுமதி வழங்குவதற்காக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரச்சார பிரிவினால் சிங்கள மொழியிலான அமைச்சரவை தீர்மான ஆவணம், தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.)

7 ஆண்டுகளின் பின் மீண்டும் டெஸ்ட் தொடரைக் கைப்பற்றுமா இலங்கை அணி?

ஆஸி.யுடனான டெஸ்ட் தொடர் இன்று காலியில் ஆரம்பம்!

ஏ. அதீல் சிஹாப்

பெட் கம்மின்ஸ் தலைமையிலான சுற்றுலா அவுஸ்திரேலிய அணிக்கும், திமுத் கருணாரத்ன தலைமையிலான இலங்கை அணிக்கும் இடையிலான இரு போட்டிகள்கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி இன்று காலை 10.00 மணிக்கு காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியும் மத்தியில் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியானது மூவகையான கிரிக்கெட் தொடர்களிலும் விளையாடுவதற்காக இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. முதல் தொடரான 3 போட்டிகள் கொண்ட இருதுடுக்கு 20 தொடரை ஆஸி. அணி 2-1 என்ற அடிப்படையில் கைப்பற்ற, அடுத்து நடைபெற்ற 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரை இலங்கை அணி 3-2 என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

இவ்வாறான நிலையில் இறுதி தொடரான இரு போட்டிகள் கொண்ட ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் முதல் போட்டி இன்று ஆரம்பமாகிறது.

ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்

சர்வதேச கிரிக்கெட் பேரவையானது டெஸ்ட் போட்டிகளுக்கும் ஒரு சம்பியனை தீர்மானிக்க வேண்டும் என்கின்ற அடிப்படையில் 'ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்' என்ற பெயரில் டெஸ்ட் தொடரானது கடந்த 2019ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. குறித்த ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரானது இரண்டு வருடங்களில் நடைபெறுகிறது.

இரண்டு வருடங்களில் நடைபெறுகின்ற டெஸ்ட் போட்டிகளின் அடிப்படையில் புள்ளிப்பட்டியலில் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்குத் தெரிவாகி, அந்த இரு அணிகளுக்கிடையில் நடைபெறும் இறுதிப்போட்டியில் வெற்றிபெறும் அணி டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டத்தை சுவீகரிக்கும். முதல் டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டத்தை கேன் வில்லியம்சன் தலைமையிலான நியூசிலாந்து அணி சுவீகரித்தது.

ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் ஓர் அங்கமாக நடைபெறுகின்ற குறித்த டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் புள்ளிப்பட்டியலில் இலங்கை அணி 6 போட்டிகளில் விளையாடி 3 வெற்றிகளையும், இரு தோல்விகளையும், ஒரு வெற்றி தோல்வியற்ற முடிவையும் சந்தித்து 55.56 சதவீத வெற்றி வீதத்துடன் நான்காவது இடத்தில் காணப்படுகிறது. மாறாக, 6 போட்டிகளில் விளையாடியுள்ள ஆஸி. அணி 5 வெற்றிகள், 3 வெற்றி தோல்வியற்ற முடிவுகளுடன் 75 சதவீத வெற்றி வீதத்துடன் 72 புள்ளிகளை பெற்று முதலிடத்தில் காணப்படுகிறது.



இலங்கை எதிர் அவுஸ்திரேலியா

2021 - 2023 ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் இன்றைய தினம் இலங்கை அணி, அவுஸ்திரேலிய அணியை எதிர்கொள்கின்ற நிலையில், இரு அணிகளுக்குமிடையில் இதுவரையில் நடைபெற்றுள்ள டெஸ்ட் போட்டிகள் தொடர்பில் அவதானம் செலுத்தலாம்.

இதுவரையில் நடைபெற்ற டெஸ்ட் போட்டிகள்

கடந்த 1983ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இலங்கை – அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் வரலாற்றுச் சிறப்புமிக்க முதல் டெஸ்ட் போட்டி கண்டி அஸ்கிரிய மைதானத்தில் நடைபெற்றது. குறித்த போட்டியில் ஆஸி. அணி இன்னிங்ஸ் மற்றும் 38 ஓட்டங்களினால் அபார வெற்றிபெற்றது. அன்றிலிருந்து இன்றுவரையில் இலங்கை – அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் 31 டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றுள்ளன.

இதில் ஆஸி. அணி 19 டெஸ்ட் போட்டிகளில் வெற்றிபெற்று ஆதிக்கம் செலுத்தும் நிலையில், இலங்கை அணி வெறும் 4 போட்டிகளில் மாத்திரம் வெற்றி பெற்றுள்ளது. 8 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி சமநிலையில் நிறைவடைந்துள்ளன. இலங்கை அணி இறுதியாக கடந்த 2016ஆம் ஆண்டு 17 வருடங்களின் பின்னர் ஆஸி. அணியுடன் 3-0 என்ற அடிப்படையில் டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியிருந்தது. அதன்பின்னர் கடந்த 2019 ஜனவரியில் இலங்கை ஆஸி.க்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட நிலையில் ஆஸி. அணி 2-0 என்ற அடிப்படையில் டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியிருந்தது.

COUNTRY	PCT %
AUSTRALIA	75.00
SOUTH AFRICA	71.43
INDIA	58.33
SRI LANKA	55.56
PAKISTAN	52.38
WEST INDIES	50.00
ENGLAND	28.89
NEW ZEALAND	25.93
BANGLADESH	13.33

இதுவரையிலான டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியல்

இறுதி ஐந்து போட்டிகள்

இரு அணிகளுக்கும் இடையில் இறுதியாக நடைபெற்ற 5 டெஸ்ட் போட்டிகள் தொடர்பில் அவதானம் செலுத்துகின்றபோது, இலங்கை அணி முதல் 3 போட்டிகளில் வெற்றி பெற்றிருக்கும் நிலையில், அடுத்த இரு போட்டிகளிலும் ஆஸி. அணி வெற்றிபெற்றுள்ளது. இலங்கை அணி இறுதியாக கடந்த 2016 ஓகஸ்ட் மாதம் கொழும்பில் வைத்து ஆஸி. அணியுடன் பெற்ற டெஸ்ட் வெற்றியின் பின்னர் இன்றுவரையில் 7 வருடங்கள் கடந்து அந்த அணியுடன் டெஸ்ட் வெற்றியை சுவைக்கவில்லை.

இருதரப்பு டெஸ்ட் தொடர்கள்

கடந்த 1983ஆம் ஆண்டிலிருந்து 2019ஆம் ஆண்டு ஜனவரி வரையில் 13 தொடர்கள் நடைபெற்றுள்ளன. இதில் ஆஸி. அணி 11 தொடர்களை வென்றுள்ள நிலையில், இலங்கை அணி இரு தொடர்களை மாத்திரம் வென்றுள்ளது.

முதல் டெஸ்ட் சம்பியன்ஷிப் மோதல்

முதலாவதாக நடைபெற்ற 2019 - 2021 டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் இலங்கை – ஆஸி. அணிகள் நேருக்கு நேர் மோதிக்கொள்ளாத நிலையில், இரண்டாவது டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் இரு அணிகளும் முதன் முதலாக மோதிக்கொள்கின்றன.

ஆஸி. அணியுடன் இறுதியாக டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியபோது...

தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Sri Lanka Cricket
Dialog

இலங்கை டெஸ்ட் குழாம்

திமுத் கருணாரத்ன (தலைவர்), பெத்தும் நிசங்க, குசல் மெண்டிஸ், ஓசத பெர்னாண்டோ, அஞ்சலோ மெத்யூஸ், தனஞ்ஜய டி சில்வா, கமிந்து மெண்டிஸ், நிரோஷன் டிக்வெல்ல, தினேஷ் சந்திமால், ரமேஷ் மெண்டிஸ், சாமிக்க கருணாரத்ன, கசுன் ராஜித, விஷ்வ பெர்னாண்டோ, அசித பெர்னாண்டோ, டில்ஷான் மதுசங்க, பிரவீன் ஜயவிக்ரம, லசித் எம்புல்தெனிய, ஜெப்ரி வெண்டர்சே

மேலதிக வீரர்கள் – துனித் வெல்லாலகே, லக்ஷித ரசன்ஜன

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

கெப்டனாக தோல்வியடைந்தவர் பயிற்சியாளராக வெற்றி

(ரமணி)

இந்தியாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க உள்ளூர் கிரிக்கெட் தொடரான ரஞ்சி கிண்ணத்தின் 2021-22 சீசன் 2 பாகங்களாக நடைபெற்றது. மும்பை, மத்திய பிரதேசம் ஆகிய அணிகள் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றன. 41 முறை சம்பியனாகி வெற்றிகரமான ரஞ்சி அணியாக சாதனை படைத்துள்ள வலுவான மும்பையை ஒருமுறைகூட சம்பியனாகாத மத்திய பிரதேசம் எதிர்கொண்டது.

மத்திய பிரதேசம் 6 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது. இந்த அற்புதமான வெற்றியால் வலுவான மும்பைக்கு மாபெரும் அதிர்ச்சி கொடுத்த கத்துக்குட்டியான மத்திய பிரதேசம் வரலாற்றில் தனது முதல் ரஞ்சி கிண்ணத்தை வென்று புதிய சரித்திரத்தை எழுதியது. அந்த அணி வென்றபோது பெவிலியனிலிருந்து கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டு உணர்ச்சி பொங்க ஓடிவந்த பயிற்சியாளர் சந்திரகாந்த் பண்டிட், தனது அணி வீரர்களை கட்டி அணைத்துக்கொண்டது ரசிகர்களின் நெஞ்சை தொட்டது.

ஆனால், அதன் பின்னணியில் மிகப்பெரிய வைராக்கியமே உள்ளது என்றே கூறலாம். கடந்த 1998-99 ரஞ்சி கிண்ணத்தில் மத்திய பிரதேச அணியின் கெப்டனாக செயல்பட்ட அவரது தலைமையில் வரலாற்றிலேயே அந்த அணி முதலும் கடைசியுமாக இறுதிப் போட்டிக்கு சென்று இதே பெங்களூர் சின்னசாமி மைதானத்தில் கர்நாடகாவுக்கு எதிராக தோற்றுப்போனது.

கடந்த 22 வருடங்களாக இறுதிப்போட்டிக்கு கூட தகுதி பெற முடியாமல் திணறிவந்த மத்திய பிரதேச அணியை இந்த வருடம் பயிற்சியாளராக வழிநடத்திய சந்திர காந்த் பண்டிட் அதே பெங்களூர் மண்ணில் 41 சம்பியன் பட்டங்களை வென்ற வலுவான மும்பையை தோற்கடித்து தனது மாநிலத்தின் சார்பில் முதல் ரஞ்சி கிண்ணத்தை வென்றார்.

100 டெஸ்ட் தோல்விகளை சந்தித்த பங்களாதேஷ்

பங்களாதேஷ் அணியுடனான இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. 13 ஓட்டங்கள் எனிய இலக்குடன் களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள், விக்கெட் இழப்பின்றி 2.5 ஓவரில் இலக்கை எட்டி 10 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இதன்மூலம் 100 டெஸ்ட் போட்டிகளில் பங்களாதேஷ் அணி தோல்வியடைந்து மோசமான சாதனையை படைத்துள்ளது. மொத்தம் 134 டெஸ்ட்களில் விளையாடியுள்ள அந்த அணி, 16 போட்டிகளில் வெற்றியும், 18 போட்டிகளில் வெற்றி தோல்வியற்ற முடிவையும் கண்டுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் 2-0 என தொடரை முழுமையாக கைப்பற்றியது மேற்கிந்திய தீவுகள் அணி. ஆட்டநாயகன் மற்றும் தொடர் நாயகன் ஆகிய இரண்டு விருதுகளையும் கைல் மேயர்ஸ் கைப்பற்றினார்.

இந்திய மகளிர் அணியுடனான மூன்றாவதும், இறுதியுமான போட்டியில் இலங்கை மகளிர் அணி ஆறுதல் வெற்றிபெற்றாலும் அந்த வெற்றி சாதனை வெற்றியாக மாறியதுடன், சமரி அத்தபத்து புதிய சாதனை ஒன்றையும் படைத்தார்.

சுற்றுலா இந்திய - இலங்கை மகளிர் அணிகளுக்கிடையில் நடைபெற்ற மூன்றாவதும், இறுதியுமான இருபதுக்கு 20 சர்வதேச போட்டியில் இலங்கை அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. எனினும், இந்திய அணி முன்னதாக நடைபெற்ற இரு போட்டிகளிலும் வெற்றிபெற்று தொடரை 2-1 என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

குறித்த போட்டியில் இலங்கை அணியின் தலைவி சமரி அத்தபத்து அரைச்சதத்தை கடந்தது மாத்திரமன்றி, இலங்கை ஆடவர் மற்றும் மகளிர் கிரிக்கெட்டில் இருபதுக்கு 20 சர்வதேச போட்டிகளில் 2000 ஓட்டங்களை கடந்த முதல் வீராங்கனை என்ற சாதனையை படைத்தார்.

இதுவரையில் திலகரட்ன டில்ஷான் 1,889 ஓட்டங்கள், குசல் பெரேரா 1,539 ஓட்டங்கள், மஹேல ஜயவர்தன 1,493 ஓட்டங்கள் மற்றும் குமார் சங்கக்கார 1,382 ஓட்டங்களை பெற்றுள்ளனர். இந்த மிகச்சிறந்த வீரர்கள் வரிசையில் சமரி அத்தபத்து 2000 ஓட்டங்களை குவித்து இலங்கை கிரிக்கெட்டில் புதிய சாதனையை பதிவுசெய்துள்ளார். சமரி அத்தபத்து 95 இன்னிங்ஸ்களில் 2,054 ஓட்டங்களை பெற்றுள்ளார்.

டில்ஷான், குசல் பெரேராவை விஞ்சிய சமரி அத்தபத்து

இதேவேளை அ இந்திய அணிக்கு எதிராக தங்களுடைய சொந்த மண்ணில் முதல் இருபதுக்கு 20 வெற்றியையும் இலங்கை அணி பதிவுசெய்தது. இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடர் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7